# விஜய்

Vijey විජය

24.08.2016 - மலர் 13, இதழ் 26




## இலங்கையில்
## உயிர்ப்பல்வகைமையை பாதிக்கும் காரணிகள்

வரலாற்றுத் தொடர்



க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கானது...

மலர்களில் தேன் அருந்தும் ஐஐ குரங்கு

விலை ரூபா 15/-



நாணயக் குற்றிகளை பளபளப்பாக்கும் வித்தை



ஸ்மார்ட்ஃபோன் பாவிப்பதால் நினைவுத்திறன் பாதிக்கும்!

ISSN 1391-9504

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

**1. நண்பர்கள் இருவரும் என்ன செய்துகொண்டிருக்கின்றனர்?**

1. மரத்தில் ஊஞ்சல் கட்டி விளையாடுகின்றனர்
2. தாம் பறித்த பழங்களை கூடையில் சேகரிக்கின்றனர்
3. மரமேறி விளையாடுகின்றனர்

**2. மரத்தில் ஏறுவதற்கு வசதியாக இருக்கும் பாகம் எது?**

1. இலை 2. கிளை 3. பூ

**3. சிறுவர்கள் மரத்தில் ஏறி விளையாடுவது ..............................................**

1. குறும்புத்தனமானது 2. ஆபத்தானது 3. பாராட்டத்தக்கது



**4. மரங்கள் தரும் பயன்கள் 4 தருக.**

..............................................................

..............................................................

..............................................................

..............................................................




**1. இந்த இடம் குறிப்பது;**

1. மரங்கள் சூழ்ந்த புல்வெளி
2. வயல்வெளி 3. ஆற்றங்கரை



**2. இங்கு எத்தனை மாடுகள் காணப்படுகின்றன?**

..............................

**3. மரத்திற்குப் பின்னால் மறைந்திருந்து மாடுகளை அவதானித்துக் கொண்டிருக்கும் விலங்கு எது?**

1. நரி
2. காட்டுப்பூனை
3. நாய்

## லேஷாவின் பிறந்தநாள் விழா

கொண்டாடி மகிழ
அன்புடன்
அழைக்கின்றோம்...

அன்புள்ள
ஹரிணி

திகதி
24.08.2016

நேரம்
பி.ப.5:00 மணி

இடம்
30, கல்யாணி வீதி,
கொழும்பு-04.

இப்படிக்கு,
குடும்பத்தினர்



**1. எந்த விழாவிற்காக இந்த அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ளது?**

..............................................................

**2. இந்த அழைப்பிதழ் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?**

..............................................................


**3. விழா எத்தினத்தில், எவ்விடத்தில் இடம்பெறவுள்ளது?**

..............................................................

**4. அழைப்பு விடுப்பவர்கள் யாவர்?**

..............................................................

| | |
|---|---|
| பூக்கள் | வண்ணக்குருவி |
| முயல்கள் | வண்ணத்துப்பூச்சிகள் |



இரண்டு .............................................. சிரித்து மகிழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தன. அந்த இடத்தில் சுற்றிவர அழகான ............................ பூத்துக் காணப் பட்டன. ........................................ செட்டை அடித்து அங்குமிங்கும் பறந்து திரிந்தன. அவ்வழியாக பறந்து வந்த ............................., முயல்களின் விளையாட்டைக் கண்டு அவ்விடத்தில் சற்றுத் தரித்திருந்துவிட்டுப் பறந்து சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் நல்லவற்றையே கடைப்பிடித்து வாழ்வோம்



எமது வாழ்வில் நாம் பலரை சந்திக்கின்றோம். நாளாந்தம் புதியவர்களின் அறிமுகம், நட்பு என்பன எமக்கு கிடைக்கின்றது. இவர்களில் யார் நல்லவர்கள்?, யார் கெட்டவர்கள்? என்று பகுத்தறிய சற்றுக் காலம் தேவைப்படும். உங்கள் வகுப்பறையில் உள்ள சக மாணவர்களில் இவர்கள் நல்லவர்கள், இவர்கள் தீயவர்கள் என்று நீங்கள் சிலரை மனதில் அடையாளப்படுத்தி வைத்திருப்பீர்கள். நல்லவர்கள் என்று கருதுபவர்களுடன் நட்பு பாராட்டும் நீங்கள், தீயவர் களைக் கண்டால் சற்று விலகியே இருப்பீர்கள். இது சகலருக்கும் பொதுவான ஓர் உணர்வு நிலையாகும்.

எனவேதான், நாம் எப்போதும் எமது வாழ்க்கையில் நல்லவற்றையே கடைப்பிடித்து வாழ வேண்டுமென்று பெரியவர்கள் கூறுகின்றனர். ஏனெனில், நாம் நல்லவர்களாக வாழ்ந்தால்தான் சுற்றி இருப்பவர்கள் நம்மில் அக்கறை செலுத்துவார்கள். சமூகம் நம்மை மதிக்கும். ஆனால், அதுவே நாம் தீயவர்களாக வாழ்ந்தோமானால், சமூகம் நம்மை வெறுப்புடனேயே அணுகும்.



எனவே, சிறுவர்களாகிய நீங்கள் எப்போதும் நல்ல சிந்தனைகளுடன் பண்பானவர்களாக இருக்க வேண்டும். நல்ல பண்புகளையும் அதன் பயன்களையும் தீயவர்களால் ஒரு போதும் உணர்ந்து கொள்ள முடியாது. தீயவர்கள் என்போர், எப்போதும் பாவங்களையும் அநியாயங்களையும் புரிபவர்களாகவே இருப்பர். இவ்வாறானவர்களின் மன ஆரோக்கியமும் உடல் ஆரோக்கியமும்



விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

விரைவில் பாதிக்கப்படும். கல்வி கற்கும் ஆற்றல் குறைந்து போகும். தம்மை மீறி முன்னேறிச் செல்பவர்களைக் கண்டால் அவர்களுக்கு பொறாமை உணர்வு ஏற்படும். இவ்வாறானவார்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும். எனவேதான் சிறுவயதிலிருந்தே ஒவ்வொருவரும் நல்ல சிந்தனைகளைக் கொண்டவர்களாகவும் நல்லவற்றையே கடைப்பிடித்து வாழவும் பழகிக்கொள்ள வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட இந்த வாழ்க்கையை எப்பொழுதும் இனிதாகவும் மற்றவர்களுக்கு பயன்மிக்கதாகவும் வாழ சிறுவயதிலிருந்தே பழகிக்கொள்ள வேண்டும். சில வேளைகளில், நாம் எவ்வளவுதான் நன்மைகள் செய்தாலும் நமக்கு நல்லவை நடப்பதில்லை என்றும் தீய செயல்களை செய்பவர்கள் நம்மைவிட சந்தோஷமாக இருக்கின்றார்கள் என்றும் எமக்குத் தோன்றும். ஆனால், அது உண்மையன்று. நன்கு ஆராய்ந்து பார்த்தீர்களாயின், இவ்வாறானவர்களின் வாழ்க்கையில் எதிர்ப்படும் சந்தோஷங்கள் தற்காலிகமானதாகவே இருக்கும். வாழ்வில் நிரந்தர அமைதி, நிரந்தர சந்தோஷம் என்பன நல்லவர்களுக்குத்தான் வாய்க்கின்றது என்பதனை உணருங்கள்.

மாணவ செல்வங்களே....

சைக்கிள் ஒன்றை வெல்லுங்கள்...!

அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் வலய மாணவர்களுக்கு மாத்திரம்



துர்க்கா பெலஸ் வர்த்தக நிலையம்

விஜய் பத்திரிகையின் ஊடக அனுசரணையில் வழங்கும் அரிய வாய்ப்பு...!

குலுக்கல் மூலம் தெரிவாகும் அதிர்ஷ்டசாலிக்கு

பரிசாக சைக்கிள் வழங்கப்படும்

**நீங்கள் செய்ய வேண்டியது**


அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் வலயத்தைச் சேர்ந்த பிரதேசங்களுக்கு நேரடியாக வரும் நமது பிரதிநிதிகள் வழங்கும் சந்தா படிவத்தைப் பூர்த்திசெய்து அவர்களிடமோ அல்லது துர்க்கா பெலஸ் விற்பனை நிலையத்திலோ 03.09.2016 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைத்து உங்களுக்குரிய வெற்றி இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



மேலதிக விபரங்களுக்கு:
துர்க்கா பெலஸ்
சாகம வீதி,
கோளாவில்-02,
அக்கரைப்பற்று.
தொ.பே.இல: 0776771924

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதே நினை



ஓர் அடர்ந்த காட்டில் அனைத்து விலங்குகளும் அங்கிருந்த நரிகளை கடிந்து விரட்டின. அதனால், நரிகள் அந்தக் காட்டை விட்டு வேறு காட்டிற்கு சென்றுவிட்டன. பல கால மாக அந்த நரிக் கூட்டம் அங்கேயே வாழ்ந்தன. நரிக் கூட்டத்தில் இளம் நரியொன்று மூதாதையர் களின் விரட்டப்பட்ட சோக கதையைக் கேட்டு கூனிக் குறுக்கியது. "என்ன? நம்மைப் போன்று வேறு விலங்கினங்களால் விரட் டப்பட்டுத்தான் இங்கு வந்தோமா? அப்போ இது நம் சொந்த காடில்லையா? இனி நானாவது இந்த அவமானத்தை துடைத்து பழைய காட்டிற்கு செல்ல முயற்சிக்கின்றேன்" என்று இளம் நரி மூதாதையர்களி டமிருந்து ஆசி பெற்று பழைய காட்டிற்குச் சென்றது.

அந்த இளம் நரி மட்டும் பழைய காட்டிற்கு சென்ற போது, "புதியவன் யாரோ வருகிறான்"என்று கலங்கின இளம் விலங்குகள். ஆனால், வயதான விலங்குகளோ நரியைஅடையா ளம் கண்டுகொண் டன. "இவன் ஏன் இங்கு வந்தான், அவனுடன் யாரும் பேசக் கூடாது" என வயதான சிங்கம் உத்தரவிட்டது.

"எங்கள் இனத்தை குழி பறிப்பவர்கள், தந்திரசாலிகள் என்று யாரோ கட்டிவிட்ட கதையை நம்பலாமா? நாங்கள் மட்டும்தான் கெட்டவர்களா? எங்களிலும் நல்லவர்கள் உண்டு" என்று வாதம் செய்தது இளம் நரி. ஆனால், ஏனைய விலங்குகள் ஏற்பதாக இல்லை, "நீ இங்கிருந்து ஓடிப் போய்விடு" என்று விரட்டின. மனம் உடைந்த நரி, மலைமீதேறி கீழே பாய்ந்து உயிரை விட்டுவிட முடிவெடுத்தது.

அப்போது அங்கிருந்த குயில் "நரி அண்ணே, உங்கள் இனத்தின் அவப்பெயரை துடைக்கத் தானே இங்கு வந்தீர்கள்? ஒரு லட்சியத்தை சுலபமாக அடைய முடியாது. விலங்குகள் போற்றும்படி சில நற்செயல்களை செய்து அவர் களின் நம்பிக்கையைப் பெற் றால் உங்கள் குறிக்கோள் வெற்றி பெறும். முயற்சி செய்யுங்கள்" என்றது.

"நீ சொல்வதும் சரிதான் என்ற நரி தற்கொலை முடிவை கைவிட் டது. புத்திசாலித் தனமாக செயல் பட முடிவெடுத்தது. வேடர்கள் விரித்தி ருந்த வலை யைப் பற்றி பறவைகளி டம் கூறி நன்மதிப் பைப் பெற் றது நரி. அதேபோல காலுடைந்த முயலை பத்திரமாக அதன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டது. ஒரு மரத்தில் இருந்து தவறி விழுந்த குருவிக் குஞ்சை, அதன் கூட்டில் எடுத்து வைத்தது. இதைக் கண்ட தாய்ப்பறவை நரிக்கு நன்றி கூறியது.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் வேட்டைக்காரர் கள்,பெரிய பள்ளமொன்றை வெட்டி இலை தழைகளால் மூடி வைப்பதைக் கண்ட நரி அந்தப் பக்கமாக வந்த சிங்கக் கூட்டத்தை எச்ச ரிக்கை செய்து அவற்றை காப்பாற்றியது. அதன் பின்னர் வயதான சிங்க ராஜாவிடம் ஏனைய சிங்கங்களும் விலங்குகளும் நரி செய்த உதவிகளைக் கூறின. அதனால், சிங்க ராஜாவும் நரிகளை தங்கள் காட்டில் சேர்த்துக் கொள்வதாக முடிவெடுத்தது. உடனே நரிகள் தங்கள் குழுவினருடன் தங்கள் சொந்தக் காட் டுக்குத் திரும்பி வாழத் தொடங்கின.


விரைவில்

சீக்ரட் சிக்ஸ்
இரகசிய குழு

தொடர்கதை

மர்ம ஒளி பரப்பியது
செவ்வாய்க்கிரக மனிதர்களா....?
உண்மையை கண்டறிய
களம் இறங்கிய இரகசிய குழு

எதிர்பாருங்கள்...


# வல்லவனுக்கு வல்லவன்



சுந்தர் தரம் ஐந்தில் படிக்கின்றான். ஒருநாள் பாடசாலை முடிந்து வீடு நோக்கி வந்த சுந்தர், வீதியில் நாவற்பழங்களை விற்கும் முதியவர் ஒருவரை கண்டான். உடனே, அந்த முதியவரின் அருகே சென்ற சுந்தர் "தாத்தா நாவற்பழங் கள் என்ன விலை?" எனக் கேட்டான். அதற்கு முதியவரோ "ஐந்து ரூபாய்க்கு 10 பழங்கள்" என பதிலளித்தார். தன் பையில் நன்றாகத் தேடிப் பார்த்த சுந்தர் ஐந்து ரூபாய் இருப்பதைக் கண்டு பேரானந்தத் துடன் "தாத்தா எனக்கும் ஐந்து ரூபாய்க்கு தாங்கள்" என்று கேட்டான்.

சிறியவன் தானே இவனை இலகுவாக ஏமாற்றலாம் என்ற எண்ணத்தோடு, இரண்டு பழங்களை குறைத் துக் கொடுத்தார் முதியவர். இதனை நன்கு அவதானித்த சுந்தர் "ஏன் தாத்தா இரண்டு பழங்கள் குறைத்து தந்துள் ளீர்கள்?" என்று கேட்ட போது "நீ சின்னப் பையன் தூக்கிச் செல்லக் கஷ்டம் தானே அதுதான் குறைத்துத் தந்தேன்" என்றார் முதியவர்.

"ஒ அப்படியா சரி தாத்தா" என பழங்களை வாங்கிக் கொண்ட சுந்தர், நாணயக் குற்றிகளைக் கொடுத்தான். அதனை எண்ணிப்பார்த்த முதியவருக்கு தூக்கி வாரிப் போட்டது. "என்ன தம்பி காசைக் குறைத்து தந்திருக்காய்" என்று கேட்டபோது "ஐயா உங்களுக்கு வயதாகி விட்டது. இந்த நாவற்பழக் கூடையோடு அதிகம் காசை தூக்கி சுமக்க முடியாது தானே அதுதான் குறைத்துத் தந்தேன்" என நாவற் பழங்களை சுவைத் தவாறு வீட்டை நோக்கி நடந்தான் சுந்தர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






வெற்று அஸ்ட்ரா கொள்கலனை நன்கு கழுவி காய விடவும்



பின் அந்த கொள்கலனைச்சுற்றி ஒட்டப்பட்டுள்ள விளம்பர பட்டியை கழற்றி அதன் மறுபக்கத்தில் உங்கள் மகள் / மகனை க் கொண்டு அவரது கனவு பற்றிய சித்திரம் ஒன்றை வரைந்துகொள்ளவும்.

சித்திரம் வரையப்பட்ட விளம்பர பட்டியை மறுபடியும் அஸ்ட்ரா கொள்கலனில் வெளியே தெரியுமாறு ஒட்டவும்.



உங்களது பிள்ளையின் கனவுகளை நனவாக்கும் பயணத்தில் உங்களுக்கு ஏற்பட்ட ஓர் சிறந்த அனுபவத்தை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.






50 வெற்றியாளர்களுக்கு 2 இலட்சம் ரூபா வீதம்

**ரூ.10 மில்லியனை வென்றிடுங்கள்**

உங்கள் கடிதம் மற்றும் சித்திரம் வரையப்பட்ட கொள்கலனை

**அஸ்ட்ரா 50ம் வருட கொண்டாட்டம்,**

**த.பெ.இல. 821, கொழும்பு**

என்ற முகவரிக்கு செப்டெம்பர் 15ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.

இப்பொழுது சந்தையில்
ரூ. 200/-

மேலதிக விபரங்களுக்கு

### போட்டிக்கான விதிகள்

1. 2016 ஜுலை மாதம் முதல் 2016 செப்டெம்பர் 15ம் திகதி வரையுள்ள காலப்பகுதிக்குள் கிடைக்கப்பெறும் ஆக்கங்கள் மாத்திரமே போட்டியில் பங்குபெறும் தகுதியைப்பெறும்.
2. ஒருவர் எத்தனை ஆக்கங்களை வேண்டுமானாலும் அனுப்பலாம் ஆனால் அவர் ஒரு தடவை மாத்திரமே வெற்றியாளராக தெரிவு செய்யப்பெறுவர்.
3. இப்போட்டியானது மாகாண வருமானத்வரித்திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் நடைபெறுகின்றது. இது சம்பந்தமாக பிந்திக்கிடைக்கும் எப்புகார்களும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. இப்போட்டி சம்பந்தப்பட்ட எந்தவொரு இறுதித்தீர்மானங்களையும் எடுக்கும் அதிகாரம் யுனிலிவர் நிறுவனத்திற்கு மட்டுமே உண்டு.
5. 7 - 14 வயதுக்குற்பட்ட சிறுவர்கள் மாத்திரமே இப்பரிசுப் போட்டியில் பங்கு பெறும் தகுதியைப்பெறுவர்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

WP/GT/4637

## சிறுவர்களின் கனவுகள் மிகவும் வித்தியாசமானவை அவை சுயநலமற்றவை நற்குணங்கள் நிறைந்தவை

இவ்வகையான கனவுகளை தேடிச்செல்வதற்காகவே நாம் வண்ணங்களோ வர்ணங்களோ அற்ற அஸ்ட்ரா டப்களை உருவாக்கியுள்ளோம். உங்கள் பிள்ளைகளின் இவ்வாறான கனவுகளை இந்த டப்பில் வரைய சொல்லுங்கள், அவற்றை த.பெ.இல.821, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சுயநலமற்ற அக்கனவுகளை நனவாக்கி நற்குணங்களால் நிறைந்த ஓர் அழகிய இலங்கையை நாம் உருவாக்குவோம்.

மேலதிக விபரங்களுக்கு பத்திரிகையை பார்க்கவும்

1323

Follow us on :
https://www.facebook.com/AstraSriLanka

Unilever

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்றைக்கு பல வருடங்களுக்கு முன் உலகம் எவ்வாறு தோன்றியது? மனிதனின் பரிணாமம், சமூக வளர்ச்சிகளை பற்றிய தகவல்கள் அனைத்தையும் நிகழ்காலத்தில் நாம் அறிந்து கொள்வதற்கு அடித்தளமிடுவதே வரலாறு ஆகும்.



# வரலாற்றைக் கற்பது அனை



## வரலாறு எனும் பாடம்

உலகின் தோற்றம் வரை பின்நோக்கிப் பயணிப்ப தோடு, வரலாற்றில் ஏதோ ஒரு விடயம் மாத்திரம் வரலாற்றில் அடங்குவ தில்லை. மனிதன் மேற்கொண்ட அரசியல், பொருளாதாரம், சமூகம், சமயம், கலை, கலாசாரம், சட்டம், நீதி உள்ளிட்ட அனைத்து நடவடிக்கை களும் வரலாற்றில் உள்ளடங் கியுள்ளன. பெரும்பாலான வரலாற்றாசிரியர்களால் வரலா றானது, மிகத் தொன்மை வாய்ந்த மானிட விஞ்ஞானமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

## வரலாற்றைக் கற்பது பெறுமதியானது

வரலாறு என்பது இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் ஒன்றோடு ஒன்று தொடர்பு படுத்தி எதிர்காலத்திற்கு வழிசமைக்கும் பாலமாகும். எந்தவொரு இனத்தையும் நாட்டையும் ஆராயும்பொழுது ஒரு இனமோ அல்லது நாடோ தாம் முகம்கொடுக்கும் பல்வேறு நெருக்கடி களுக்கும் போர்களுக் கும் மத்தியில் பயணித் திருக்கும் என்பது புலனா கும். அத்தோடு, பல சந்தர்ப் பங்களில் தேசிய நெருக்கடி களுக்கு முகம்கொடுக்கும் தேசிய தலைவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்வது வரலாறாகும். உதாரணமாக மகாத்மா காந்தி அவர்கள், தான் வாழ்ந்த காலத்திற்கு சுமார் நூறு வருடங்களுக்கு முன் இத்தாலிய சுதந்திர போராளிகள் கடைப்பிடித்த செயற்பாடுகள் குறித்து எழுதப்பட்ட நூலை வாசித்தமையே, அவரது சுதந்திரப் போராட்டத்திற்கு உந்து சக்தியாக திகழ்ந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி பார்க்கும் பொழுது வரலாற்றை கற்பதால் நிகழ்காலத்தில் முகம் கொடுக்கும் சவால்களை வெற்றிகரமாக சமாளிப்பதற்கான வழிகாட்டியாக அவை திகழ்கின்றன எனலாம்.

## மனிதன் குறித்து மனிதனின் அறிவு வளர்ச்சி அடைதல்

புராதன கிரேக்கர்களின் செயற்பாடுகளை எதிர்கால சந்ததியினர் மறந்துவிடக்கூடாது என்ற எதிர்பார்ப்பிலேயே, 'ஹெரடோட்டஸ்' வரலாற்றை எழுதினார். பல்வேறு காலகட்டங்களில் ஆட்சிபுரிந்த மன்னர்களினதும் வேறு சாதனையாளர்களினதும் வரலாற்று நாயகர்களினதும் செயற்பாடுகள் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. கடந்த கால மனித செயற்பாடுகளுக்கு பின்புலமாக இருந்த நோக்கங்கள் தெளிவுபடுத்த பட்டுள்ளன. 'காலய்ல்' எனும் வரலாற்றாசிரியரின் பிரெஞ்சுப் புரட்சி (பிரான்சிய புரட்சி) எனும் நூலில் புராதன மனித செயற்பாடுகளை மட்டுமல்லாது அதற்குரிய காரணங்களும் விளக்கப்பட்டுள்ளன.

மகாவம்சத்திலும்கூட இலங்கையின் வரலாற்று நிகழ்வுகளும் அதற்குச் சாதகமான காரணிகளும் விபரிக்கப்பட்டுள்ளன.

## கடந்த காலத்துடன் தொடர்புகளை ஏற்படுத்த வாய்ப்பளிக்கின்றது

வரலாற்றைக் கற்பதால் இன்றைய மனிதன் எத்தனையோ படிப்பினைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த (சா/த) பாடத்திட்டத்திற்கு உட்பட்டது



# வருக்கும் மிகுந்த பயன்தரும்

பெறமுடியும். ஓர் இனத்தின் தோற்றம், கலை, கலாசாரம், பண்பு, பழக்கவழக்கம், மருத்துவம் உள்ளிட்ட பல விடயங்களை அறிந்துகொள்வதுடன், புராதன தொழில்நுட்பத்தையும் ஆராயலாம். கடந்தகால மனிதனுக்கும் நிகழ்கால மனிதனுக்கும் இடையிலான தொடர்புகளை அழிக்க முடியாது.

## இனத்தின் பெறுமதியை பாதுகாக்கின்றது

வரலாறு குறித்த குறிப்புகள் ஓர் இனத்தினதும், ஒரு நாட்டு மக்களினதும் பெருமைகளையும், அடையாளங்களையும் வெளிப்படுத்துவதுடன் அவற்றைப் பாதுகாக்கவும் செய்கின்றது. வரலாற்றை கற்கும் ஒவ்வொருவரும் தாம் ஒரு வரலாற்றுப் பெருமைக்குரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தமது இனத்திற்கென ஓர் உயர்ந்த பாரம்பரியம் உள்ளது என்பதனையும் வரலாற்றினை கற்பதன் மூலம் அறிந்து கொள்ளும் வாய்ப்புள்ளது. அதேபோல், ஏனைய இனங்களின் பெருமைகளையும் உணர்ந்து மதிக்கும் மனப்பான்மையும் உருவாக வேண்டும். எனவே, வரலாறு சம்பந்தமான சரியான தகவல்களை பெறுவதன்மூலம் எந்தவொரு இனத்தினதும் வரலாற்றுப் பெருமைகளை அறிந்து பாதுகாக்க முடியும்.



## தேசிய ஒற்றுமையை கட்டி எழுப்புதல்

வரலாற்றின் மூலம் எடுத்துக்கூறப்படும் தேசிய பெறுமதிகளினால் மனிதர்களிடையே ஏனையோர் குறித்து நட்புறவு அதிகரிக்கும். அது தேசிய ஒற்றுமைக்கு வழிவகுக்கும். அத்தோடு, அரசியல் குறித்த புரிந்துணர்வும் ஏற்படும். உலக வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த நிகழ்வுகள் அதன்மூலம் கற்ற பாடங்கள் மனித சமுதாயத்திற்கு மிகவும் அத்தியாவசியமாகும். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுகள் அரசியல், பொருளாதாரம், சமூகம்சார் விடயங்கள் குறித்த அறிவு ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் அத்தியாவசியமாகும்.

## வரலாற்றை கற்க உதவும் ஏனைய பாடங்கள்

**தொல்பொருளியல்:**

புராதன முக்கியத்துவம் நிறைந்த இடங்கள், தூண்கள், தோரணங்கள், நாணயங்கள், கல்வெட்டுக்கள் உள்ளிட்ட பல்வேறு அரும்பொருட்களை மிகச் சரியாகப் பயன்படுத்தி வரலாற்றை மீள உருவாக்க தொல்பொருளியலாளர்களுக்கு முடியும். குறிப்பாக, மிகத் தொன்மையான வரலாற்றுக் காலம் குறித்த அறிவைப்பெற வரலாற்று நிபுணர்களுக்கு தொல்பொருளியலே பேருதவி புரிகின்றது. 1921-1922 இல் சிந்துவெளி நாகரிகத்தை இந்திய தொல்பொருள் ஆய்வாளர்களின் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் மூலமே உலகிற்கு வெளிக்கொண்டுவர முடிந்தது.

**புவியியல்:**

எகிப்து, மொசப்பெத்தேமியா, சிந்துவெளி பள்ளத்தாக்கு மற்றும் சீனா போன்ற மிகத் தொன்மையான நதிக்கரை நாகரிகங்களை கண்டுபிடிக்க காலநிலை, மண்வளம், நதி, மலைத்தொடர், கடல், கடற்கரை மற்றும் கனிப்பொருள் வளம் உள்ளிட்ட பல்வேறு புவியியல் காரணிகள் உதவின.

**இலக்கியம்:**

இலக்கியத்தின் கீழ் புராதன வரலாறு பல நாடுகளில் அறியப்பட்டுள்ளது. பரம்பரைக் கதைகள், அரச கதைகள், செய்திகள், தேவசாஸ்திரங்கள், சமய நூல்கள் மட்டுமல்ல பழமையான நாவல்கள்கூட வரலாற்றை வெளிப்படுத்துகின்றன.

## வேறு சமூக விஞ்ஞானம்

மானிட விஞ்ஞானமும் வரலாறும் மிக நெருங்கிய தொடர்பு கொண்ட இரு துறைகளாகும். பல்வேறு இனக்குழுக்களுக்குரிய ஆதி மனித கலாசார பாரம்பரிய முறையை ஆழ்ந்து அவதானித்து ஆய்வுகளை மேற்கொண்டு தீர்மானிக்க வரலாற்றுத் துறைக்கு மானிட விஞ்ஞானம் பெரும் உதவி புரிகின்றன.


-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கொரில்லா உலகின் மன்னனாகத் திகழ்ந்த ‘டைட்டஸ்’





திரைப்படங்கள் மற்றும் ஆவண நிகழ்ச்சிகளினூடாக உலகப் புகழ்பெற்றுத் திகழ்ந்த ‘டைட்டஸ்’ எனும் கொரில்லா மன்னன், இவ்வுலகைவிட்டுப் பிரிந்து ஏழாவது ஆண்டு நினைவு தினம் அண்மையில் ருவண்டா நாட்டில் அனுஷ்டிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டில் டைட்டஸ் மரணத்தை தழுவும்போது அது ருவண்டா வனப் பாதுகாப்பு பூங்காவில் வசித்து வந்தது. டைட்டஸின் மரணம் அன்று முழு உலகையும் துயரத்தில் ஆழ்த்தியது. டைட்டஸ் மூலமே, கொரில்லாக்கள் பற்றிய பல தகவல்களை ஆய்வாளர்கள் அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.







## டைட்டஸ் மரணம்

டைட்டஸ் உயிரிழக்கும்போது அதன் வயது 35 ஆகும். டைட்டஸின் உடல் ருவண்டா நாட்டின் கரிசோகே மலையில் டயேன் ஃபொஸியின் கல்லறை அமைந்துள்ள பகுதியில் உள்ள கொரில்லாக்களின் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

## டயேன் ஃபொஸி

உலகப் புகழ்பெற்ற சூழலியலாளராகவும் கொரில்லாக்கள் குறித்த விசேட நிபுணத்துவம் பெற்றவராகவும் டயேன் ஃபொஸி என்ற பெண்மணி திகழ்ந்தார். இது தவிர, கொரில்லாக்களை பாதுகாப்பதற்காக தன் உயிரைக் கொடுத்து செயல்பட்ட ஜீவகாருண்யம் மிக்க பெண்ணாகவும் இவர் கருதப்படுகின்றார். இவருடன் மேலும் பல சூழலியலாளர்களும் இணைந்து 1974 ஆம் ஆண்டு முதல் டைட்டஸ் எனும் இந்த கொரில்லாவை ஆய்வு செய்து வந்துள்ளனர்.

கொரில்லாக்களைப் பாதுகாப்பதற்காக உலகில் குரல் எழுப்பியவர்தான் டயேன் ஃபொஸி ஆவார். இவர் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வேட்டைக்காரக் குழுவொன்றினால் கொலை செய்யப்பட்டார். அவ்வேளையில் அவர் ருவண்டா நாட்டின் விருன்கா மலைத்[illegible] கட்டப்பட்ட சிறியதொரு வீட்டில் வசித்து வந்தார். வேட்டைக்காரர்களால் கொலை செய்யப்பட்ட அனைத்து கொரில்லாக்களும் இந்த கரிசோகே மலைப் பகுதியில் டயேன் ஃபொஸியின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைக்கு அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

## டைட்டஸின் அறிமுகம்

‘கொரில்லாஸ் இன் த மிஸ்ட்’ எனும் பெயரில் டயேன் ஃபொஸி தயாரித்த ஆவண நிகழ்ச்சி ஒன்றின்மூலமே டைட்டஸ் முதன்முதலில் புகழ்பெற்றது. அதன் பின்னர் BBC தகவல் பெட்டக நிகழ்ச்சிகள் பலவற்றில் டைட்டஸை பயன்படுத்திக்கொண்டனர். இறுதியாக 2008 ஆம் ஆண்டு டைட்டஸ் மற்றும் மலைவாழ் கொரில்லாக்கள் குறித்த ஆவண நிகழ்ச்சியொன்றை BBC நிறுவனம் தயாரித்தது. அது ‘டைட்டஸ் த கொரில்லா கிங்’ என்ற பெயரில் உலகெங்கும் புகழ்பெற்றது.

## கொரில்லா வேட்டை

ருவண்டா நாட்டில் கொரில்லாக்களை பெரும் சிரமத்துடனேயே பாதுகாத்து வருகின்றனர்.

வேட்டைக்காரர்களினால் அவற்றுக்கு அச்சுறுத்தல் நிலவுகின்றது. இறைச்சிக்காகவும் ஆபரணங்கள் தயாரிக்கவும் கொரில்லாக்கள் வேட்டையாடப்பட்டு வருகின்றன. ஆபரணங்கள் மற்றும் ஆயுத தயாரிப்புக்காக அவற்றின் கை - கால் எலும்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

- ஜெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக பாடநெறி பாகம்-II

பாடம் - 118

# தொலைக்காட்சியில் தொலை இயக்கியைப் பயன்படுத்தல்





இன்று அநேகமான தொலைக்காட்சிகள் 'ரிமோட் கொன்ட்ரோல்' (Remote control) எனப்படும் தொலை இயக்கியின் மூலமே இயக் கப்படுகின்றது. அதாவது தொலைக்காட்சியை ஒன், ஓஃப் செய்வதோ, செனல்களை மாற்றுவதோ, சத்தத்தை கூட்டிக் குறைப் பதோ, நிறமாற்றங்களை, தெளிவை மாற்றியமைத்தல் என பலவிதமான செயற்பா டுகளை இந்த 'ரிமோட் கொன்ட்ரோல்' மூலம் இலகுவாக செய்கின்றோம். ஆனால், தொலைக்காட்சி அறிமுகமாகிய ஆரம்ப காலங்களில் இந்த வசதி இருக்கவில்லை. இக்காரியங் களைச் செய்யக்கூடிய வசதி கள் தொலைக்காட்சி பட்டன் களில் மாத்திரமே இருந்தன. மேற்குறிப்பிட்ட ஏதாவது மாற்றங்களைச் செய்ய வேண்டுமாயின், டீ.வி யின் அருகே எழுந்து சென்றே அவற்றை செயற்படுத்த வேண்டியிருந் தது.

எனினும், ரிமோட் கொன்ட் ரோலின் வருகையின் பின்னர் இருந்த இடத்தில் இருந்த வாறே இவற்றை செய்யக் கூடியதாக அமைந்து விட்டது. இத்தகைய வசதிமிக்க, சிறப்பு வாய்ந்த ரிமோட் கொன்ட்ரோல் அறிமுகமாகியது 1950 ஆம் ஆண்டிலாகும். செனித் ரேடியோ கோப்ப ரேஷன்' எனும் நிறுவனமே மேற்படி முதலாவது ரிமோட் கொன்ட்ரோலை அறிமுகப்படுத்தி சந்தைப்படுத் தியது. எனினும், அது வயர் தொடர்பில் இயங்கும் ரிமோட் கொன்ட்ரோல் முறையிலேயே அமைந்திருந்தது. அதாவது, தொலைக்காட்சிக்கும் ரிமோட்டிற்கும் இடையே வயர் தொடர்பு காணப்பட்டது. இதன் பின்னர் 1955 ஆம் ஆண்டில் வயர் தொடர்புகளற்ற 'ரிமோட் கொன்ட்ரோல்' அறிமுகத்திற்கு வந்தது. இதனை இயூஜீன் பொலீ என்பவரே அறிமுகப் படுத்தினார். 'வயர்' தொடர்பு களற்ற ரிமோட் கொன்ட்ரோல் அறிமுகமாகியதையடுத்து உலகம் பூராகவும் இதற்கு நல்ல வரவேற்பு கிட்டியது. இதனால், 'ரிமோட் கொன்ட் ரோல்' உள்ள தொலைக்காட் சிப்பெட்டிகள் அதிகம் விற்பனையாகத் தொடங்கியதையடுத்து மேலும் அவை மெருகூட்டப்பட்டு பரவலாக பாவனைக்கு வந்தது.

இவ்வாறு பயன்பாட்டிற்கு வந்த இந்த ரிமோட் கொன்ட் ரோல் இன்று பல்வேறு வகை யிலான நவீன தொலைக்காட் சிப் பெட்டிகளுக்கும் ஏற்ற வகையில் நவீனத்துவம் பெற்றிருப்பதுடன், இன்றியமையாத ஒன்றாகவும் அமைந்துவிட்டது எனலாம்.

## புதியன புகுதல்

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பது தொலைக்காட்சி வரலாற்றில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் ஒன்றாகவே இருந்து வருகின்றது. ஒளிபரப்பில் மட்டுமன்றி, நிகழ்ச்சி அமைப்பிலும்கூட இந்த புதியன புகுத்தல் என்பது இடம்பெற்றே வருகின்றது. மேற்கத்தேய நாடுகள் பலவற்றில் நடைபெறும் இந்த புதியன புகுத்தல் முறையானது, இலங்கை போன்ற கீழைத்தேய நாடு களிலும் மிக விரைவாக செயற்பாட்டிற்கு வரும் ஒன்றாகவே இருந்தது. இருப்பினும், காலப்போக்கில் இலங்கை போன்ற நாடுகள் தமக்கே உரித்தான தனித் தன்மையுள்ள விடயங்களை தொலைக்காட்சி வழியே வழங்கும் அளவிற்கு தனித் துவத்தைப் பெறத் தொடங் கின. (தொடரும்)



- ரீஷபன்

# தூக்கக் கலக்கமா? காரணம் இதோ...



நாம் தினசரி செய்யும் வேலையின் திறனால் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களாகிய லேக்டிக் அமிலம் போன்ற ரசாயனங்களின் தாக்கமே தூக்கமாகும். இதனால்தான் நம்மில் பலர் வேலைகள் முடித்தவுடன் 'களைப்பினால் தூங்கினோம்' என்று கூறுவதுண்டு.

மேலும், நம் உடலில் உள்ள உறுப்புகள் அனைத்தையும் செயற்படுத்துவது நரம்பு மண்டலமாகும். இந்த நரம்பு மண்டலத்தின் முக்கிய உறுப்பே மூளையாகும். அந்தவகையில் மூளையில் கட்டளைகளுக்கிணங்கி நரம்பு மண்டலம் செயற்படுவதால்தான் நாம் இயங்குகின் றோம் என்பதும் நாம் அறிந்த உண்மை. இவ்வாறு செயற்படும் நரம்பு மண்டலத்தில் பாதிப்பு ஏற்பட்டு, இயக்கத்திற்கு தடை ஏற்படுவதாலும் தூக்கம் ஏற்படும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இவ்வாறு ஏற்படும் தூக்க மானது, கண்டிப்பாக மனிதர் களுக்கு அவசியமான ஒன்றா கும். இந்த தூக்கம் இல்லா விட்டால் மனிதர்கள் நோய்வாய்ப்பட்டு இறக்க நேரிடும் எனவும் ஆய்வா ளர்கள் மேலும் தெரிவித்துள்ளார்கள். அத்தோடு, குழந்தைகளின் உடல் வளர்ச்சி க்கும், செல்கள் புதுப்பிக்கப்படுவதற்கும் குழந்தைகள் அதிக நேரம் தூங்க வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. குறிப்பாக, சாதாரண மனிதன் ஒருவன் அன்றாடம் 8 மணிநேரத்திற்கு நன்றாகத் தூங்க வேண்டும் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ஓசோன் படலம்

நம்மைக் குளிரிலிருந்து பாதுகாத்துக்கொள்ள ஒரு போர்வையைப் போர்த்திக் கொள்வதுபோல் பூமிக்கும் ஒரு போர்வை உண்டு. அதுதான் 'ஓசோன் படலம்' ஆகும்.

## ஓசோன் மண்டலம்

பூமியிலிருந்து 20 முதல் 30 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் ஓசோன் பெரும் படலமாக உள்ளது. சூரியனில் இருந்து வரும் நச்சுத் தன்மை கொண்ட ஒளிக் கதிர்களால் பூமியில் உள்ள உயிர்களுக்கு பாதிப்புகள் ஏற்படாதபடி ஓசோன் படலம் பாதுகாக்கின்றது. ஓசோன் படலம் இல்லையென்றால் பூமியில் உள்ள உயிர்கள் அனைத்தும் அழிந்துவிடும். இந்த ஓசோன் என்பது ஒட்சிசனின் ஒரு படலமாகும்

## நைட்ரிக் ஒக்சைட்

வானில் செல்லும் விமானங்கள் ஓசோன் படலத்திற்கு முதல் எதிரிகளாகும். அந்த விமானங்களிலிருந்து வெளிவிடப்படும் கழிவுப் புகையாகிய 'நைட்ரிக் ஒக்ஸைட்' எனும் வாயு ஓசோன் மண்டலத்தை விரைவாக அரித்துவிடும். இவை தவிர விவசாய தெளிப்பான்கள் மூலம் காற்றில் வீசப்படும் நச்சுத்தன்மையுள்ள



சிறு சிறு துகள்களும் 'ஏரோசால்' எனும் பொருளும் குளிர்சாதனப் பெட்டியில் குளிர்விக்கப் பயன்படும் வாயு கூட ஓசோனுக்கு எதிரியாகும்.

## புளூரோ கார்பன்கள்

ஓசோன் மண்டலத்திற்கு மிகப்பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துவது பூமியில் மேற்கொள்ளப்படும் அணு குண்டுப் பரிசோதனைகளும், அவற்றில் இருந்து வெளிப்படும் சிறிய அளவிலான கதிரியக்கமுள்ள மேகமும்தான். சரியான பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் செயற்படும் பெற்றோலிய, இரசாயனத் தொழிற்சாலைகளும், இந்த மண்டலத்திற்கு எதிரிகளே. இவை வெளியிடும் 'புளூரோ கார்பன்கள்' ஓசோனுடன் இணைந்து வேறு பிற பொருள்களாக மாறிவிடுகின்றன.

இதனால் புவியில் உள்ள உயிரினங்களின் பாதுகாப்பைக் கருதி விஞ்ஞானிகள் அடிக்கடி எச்சரிக்கையை விடுத்த வண்ணம் உள்ளனர். இப்பொழுதும்கூட ஓசோன் மண்டலத்தில் சில ஓட்டைகள் ஏற்பட்டிருக்கலாம் என அவர்கள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(-அ)

# தெரிந்து கொள்வோம்

★ இலங்கையிலுள்ள நீர்த்தேக்கங்களில் நீரை அதிகம் தேக்கக்கூடிய நீர்த்தேக்கம் எது?

மொரகஹ கந்த நீர்த்தேக்கம் (521 கன மீற்றர்)





★ ஐக்கிய இராச்சியத்தின் (U.K) பிரதான நிலப் பிரிவுகள் எவை?

i. இங்கிலாந்து
ii. ஸ்கொட்லாந்து
iii. வேல்ஸ்
iv. அயர்லாந்து

★ 2016 இல் பெரு நாட்டில் தெரிவான ஜனாதிபதி யார்?

பெட்ரோ பப்லோ குஸ்னியாக்கி





★ உலக அகதிகள் தினமாக ஆண்டுதோறும் எப்போது நினைவு கூரப்படுகின்றது?

ஜூன் 20

★ உலக குடிசனத்தொகையில் அதி கூடிய அகதிகளை கொண்டுள்ள நாடு எது?

ஜெர்மனி





★ சின்ன ஆசியா என்று அழைக்கப்படும் ஐரோப்பிய நாடு எது?

துருக்கி

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

**கேள்வி:** இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படும் விவசாய நிலங்களுக்கு அண்மையில் உள்ள நீர்நிலைகளிலுள்ள நீரின் மேற்பரப்பில் பச்சை நிறம் அதிகமாகக் காணப்படுவது ஏன்?

**பதில்:** விவசாய இரசாயன உரங்களை நன்கு பயிர்களுக்கு இட்டவுடன், அவை நீரில் கரைந்து நிலத்திற்குள் செல்கின்றன. அவ்வாறு நிலத்தினூடாக செல்லும் உரங்களானது, அருகில் உள்ள நீர்நிலைகளுக்கும் சென்றடைகின்றது. இதன்போது, நீர்நிலைகளுக்கு செல்லும் கனிமங்களின் சக்தியால் அங்குள்ள பாசிப்படர்வுகள் வேகமாக வளர்ச்சியடைந்து, அவை நீரின் மேற்பரப்பில் பச்சை நிறமாக காட்சியளிக்கின்றன.









**கேள்வி:** 'இன்செக்டாக்கள்' எனப்படும் பூச்சிகள் பெருமளவில் தரையில் பரவலடைவது ஏன்?

**பதில்:** இவற்றின் வாழ்க்கைச் சக்கரம் மிகவும் குறுகியது. இதனால் இவை வெகு விரைவாக பெருகுவதுடன், இளம் பருவத்தில் அவை வாழ்க்கை முறையினை வேறுபடுத்திக் கொள்கின்றன. இதற்கு ஏற்ற சூழ்நிலை பரவலாக தரையில் காணப்படுவதால், இப்பூச்சிகள் பெருமளவு தரையில் பரவலடைகின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்மார்ட்ஃபோன் பயன்பாட்டினால் நினைவுத்திறன் பாதிப்படையும்!



ஸ்மார்ட்ஃபோன்களின் பயன்பாடு எமது வேலைகளை இலகுபடுத்துவதாக இருந்தாலும், இவற்றின் பாவனை காரணமாக எமது மூளையின் பயன்பாடு குறைந்து, நினைவுத் திறன் பாதிப்படையும் அபாயம் நிலவுவதாக பிரித்தானிய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.



ஸ்மார்ட்ஃபோன்கள், மடிக் கணினிகள், கணினிகள் என்பன எமது அன்றாட செயல்களை எளிதாக்குவதாக உள்ளன. அவற்றின் உதவியுடன் தேவையான தகவல்களை உடனடியாகத் தேடித் தெரிந்து கொள்ள முடிகிறது. நாம் அன்றாடம் செய்ய வேண்டிய பணிகள், போக வேண்டிய இடங்கள், தொலைபேசி இலக்கங்கள், சந்திக்க வேண்டிய நபர்கள் என எதனையும் எமது ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய தேவையை இந்த சாதனங்கள் இல்லாமல் செய்து விட்டன. அனைத்து வேலைகளையும் இந்த சாதனங்களில் பதிந்துவிட்டால் போதும்; நேரத்திற்கு அனைத்தையும் நினைவூட்டி விடும்.

எனினும், இத்தகைய செயல்பாட்டினால், நமது மூளையின் பயன்பாடு குறைந்துவிடுகின்றது. இந்நிலையானது, எமது நினைவுத்திறனை பாதிப்பதாக ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது. உதாரணமாக: ஏதேனுமோர் இடத்திற்கு GPS உதவியுடன் (செயற்கைக் கோள் மூலம் வழித்தடங்களைக் காட்டும்) பயணித்த ஒருவர், GPS பயன்பாடு இன்றி குறித்த இடத்தை மீண்டும் சென்றடைய மிகவும் சிரமப்படுகின்றார் என இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்ட ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.





எனவே, ஸ்மார்ட்ஃபோன்கள் உட்பட, நவீன சாதனங்கள் அனைத்தும் மூளையின் வேலைச்சுமையைக் குறைக்கும் அதே நேரத்தில், அது நமது நினைவுத்திறனையும் பாதிக்கின்றது என்பதை அனைவரும் புரிந்து செயல்பட வேண்டும் என இந்த ஆய்வில் பங்கேற்றவர்களில் ஒருவரான லண்டன் பல்கலைக்கழக கல்லூரியைச் சேர்ந்த கலாநிதி சேம் கில்பர்ட் தெரிவித்துள்ளார்.

உங்கள் அபிமான
தமிழ்Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ்Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் உயிர்ப்பல்வகைமையைப் பாதிக்கும் காரணிகள்

## இருப்பிடங்களை இழத்தல்

தெற்காசிய வலயத்தில் உள்ள நாடுகளில் அதிக உயிர்ப்பல்வகைமைத்துவம் கொண்ட நாடாக இலங்கை இனங்காணப்பட்டுள்ளது. எனினும், பல்வேறு காரணங்களினால் உயிர்ப்பல்வகைமையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவற்றில், இருப்பிடங்களை இழத்தல் என்பது பிரதான காரணியாக உள்ளது. இந்த பாதிப்பினைத் தவிர, இலங்கையின் உயிர்ப்பல்வகைமையில் தாக்கம் செலுத்தும் மேலும் சில பிரதான காரணிகள் பற்றியும் இங்கு பார்ப்போம்.

கீழே கூறப்பட்டுள்ள ஐந்து காரணங்களினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

### மீன்கள் வாழும் வலயங்கள்
### *Ichthyological Zones*

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் அமைந்துள்ள ஆறுகள் கொண்ட உலர் வலயம், மகாவலி வலயம், தென்மேல் வலயம், இடை வலயம் என இந்த வலயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. பண்டைய காலத்திலிருந்து மக்களால் உருவாக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களும் இந்த வலயங்களுக்கு உரியவையாகும்.

### பாலூட்டிகள் வசிக்கும் வலயங்கள்
### *Mammalian Zones*

இலங்கையின் காடுகள், மழைக்காடுகள் மற்றும் புதர்கள் கொண்ட பிரதேசங்களில் வசிக்கும் பாலூட்டிகளின் அடிப்படையில் இந்த வலயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

### பறவைகள் வாழு
### *Avifaunal Zo*

இந்தியாவிலிருந்து வரு
வலயங்கள் உட்பட; உ
வலயம், மத்தியநாட்டு








உயிர்ப்ப
பாதிப்பு
ஏற்படுத்

உலகில் வாழு
கள், அரசுகள்
கள் என அனை
திருக்கின்ற பி
உயிர்ப்பல்வ

## 01 சனத்தொகை வளர்ச்சி
### *Population Growth*

அதிக சனத்தொகை கொண்ட ஆசிய நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். 2013ஆம் ஆண்டின் சனத்தொகை புள்ளிவிபரங்களின்படி, இலங்கை யில் ஒரு சதுர கி.மீற்றர் நிலப்பரப்பில் 323 நபர்கள் வசிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வளர்ச்சி வேகத்திற்கமைய, இங்குள்ள விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் தேவையான இடவசதி படிப்படியாக குறைந்து செல்கின்றது. இதேவேளை, எதிர்வரும் காலத்தில் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வேகம் அதிகரிக்கும் என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. இதற்கமைய, இலங்கையின் உயிர்ப்பல்வகைமைத்துவத்திற்கு எதிர்காலத்தில் பெரும் பாதிப்பு ஏற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.








2016 இல் இலங்கையின் சனத்தொகை (மில்லியன்) **21**

2031 இல் இலங்கையின் சனத்தொகை (மில்லியன்) **22+**

15 ஆண்டுகளில் ஒரு மில்லியன் அதிகரிப்பு

## 02 என்றும் பசுமையான ஈரநிலக் காடுகள் அழிப்பு
### *Wet Evergreen Forest Deforestation*

சனத்தொகை அதிகரிப்புடன், மக்களுக்குத் தேவையான குடியிருப்புகளை அமைக்கவும் உணவு மற்றும் இதர வசதிகளுக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனால், காடுகளில் நிலவும் உயிர்ப்பல்வகைமைத்துவத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதோடு, அந்த சூழல் தொகுதியும் அதனை அண்டிய சூழல் தொகுதிகளும் பாதிக்கப்படுகின்றன.




1800 இல் நாட்டில் காணப்பட்ட காடுகளின் சதவீதம் **80%**

1900 இல் நாட்டில் காணப்பட்ட காடுகளின் சதவீதம் **70%**

தற்போதைய நிலை




மொத்த நிலப்பரப்பு (சதுர கிலோமீற்றர்) **65,625**

மனித பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலப்பகுதியில் தேயிலை, தெங்கு, இறப்பர் உள்ளிட்ட பெருந்தோட்டப் பயிர்கள் மட்டுமன்றி; நகர திட்டமிடல்கள், குடியிருப்புகள் மற்றும் இதர பயிர்ச்செய்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டின் சாதாரண பகுதிகளைவிட, ஈர வலயத்தின் சனத்தொகை மும்மடங்கு அதிகமாகும்.

## 03 கண்டல் தாவரங்கள்
### *Mangrove Destruction*

இலங்கையின் கரையோரப்பகுதிகளைப் பாதுகாப்பதற்
தாவர சூழல் தொகுதிகள் முக்கியமான பங்
கண்டல் தாவர சூழல் தொகுதிகளில் தனித்
மைக் கட்டமைப்பினை காண முடியும். எனினும், இந்த
சூழல் தொகுதிகளும் பல்வேறு வகையில் அழிவுகளுக்
வருகின்றன. இறால் வளர்ப்பு மற்றும் உப்பு உற்பத்தி இ
இடத்தினை வகிக்கின்றன. இறால் வளர்ப்பு காரணமாக
வளமும் பாதிக்கப்படுகின்றது. மேலும், சதுப்பு நிலங்க
கின்றன. கண்டல் காடுகளின் அழிவு காரணமாக, மிக
கடலரிப்பு இடம்பெறுகின்றது. தற்போது கண்டல் காடு
பாதுகாப்பதற்கு பல அமைப்புகள் முன்வந்துள்ளமை கு

இலங்கையின் மொத்த கண்டல் காடுகள் (ஹெக்டேயர்) **15,00**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

து.

ள் வாழும் வலயங்கள்

nal Zones

லிருந்து வருகை தரும் சுற்றுலாப் பறவைகள் வாழும்
உட்பட; உலர் வலயம், மலைநாட்டு வலயம், தாழ்நில
த்தியநாட்டு வலயம் என பிரிக்கப்பட்டுள்ளன.

கள்

- உலர் வலய பறவைகள்
- இந்தியப் பறவைகள்
- தாழ்நாட்டுப் பறவைகள்
- மத்திய நாட்டுப் பறவைகள்
- மலைநாட்டுப் பறவைகள்
- ஊவா பறவைகள்



## இருப்பிடங்களை இழப்பதற்கான மேலும் சில பிரதான காரணிகள்

இரத்தினக்கல் அகழ்வு போன்ற சுரங்க அகழ்வு தொழில்கள் காரணமாக, நிலத்தடி நீரோட்டத்திற்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. நீர் மாசடைகின்றது.

ஆறுகளில் மணல் அகழப்படுவதனால் நீர் மாசடைகின்றது. அத்துடன், உவர்நீர் நாட்டிற்குள் பிரவேசிக்கின்றது.

கரையோரப்பகுதிகளில் மணல் அகழ்வுகளின்போது, அதனைச் சார்ந்த சூழல் தொகுதிகளிலும் பாதிப்பு ஏற்படுகின்றது.

மேற்கூறப்பட்டவாறான மணல் அகழ்வு செயற்பாடுகள் காரணமாக, கரையோரப்பகுதிகள் நில அரிப்புக்கு உட்படுகின்றன.

காடழிப்பும் ஒரு காரணமாகும். இது, ஈரவலய காட்டுப் பகுதிகளில் இடம்பெறும் சாதாரண நிலையாகும்.

சேனைப் பயிர்ச்செய்கை காரணமாக, உலர் வலயக் காடுகள் படிப்படியாக பயனற்ற காடுகளாக மாறுகின்றன.

மலையகத்தின் சரிவு நிலப்பகுதிகளில் முறையான நில முகாமைத்துவம் பின்பற்றப்படாதமையினால், அப்பகுதிகள் மண்சரிவுக்கும் நீர் மாசடைவுக்கும் உட்படுகின்றன.

இயந்திரங்கள் மற்றும் கனரக வாகனங்களைப் பயன்படுத்தி நிலப்பகுதிகள் சுத்தம் செய்யப்படுவதனால், அப்பகுதிகள் மாசடைகின்றன.

பாய்ந்தோடும் நீரின் பாதையை அணைக்கட்டுகளை அமைத்து மாற்றுவதனாலும் அந்த சுற்றாடல் தொகுதிகளில் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

# உயிர்ப்பல்வகைமை
# BIODIVERSITY

உலகின் இருப்பிற்கு இன்றியமையாத அங்கமாக 'உயிர்ப்பல்வகைமை' (Biodiversity) காணப்படுகின்றது. உலகில் வாழும் மில்லியன் கணக்கான விலங்குகள் மற்றும் தாவரங்கள் இந்த உயிர்ப்பல்வகைமையில் அடங்கும். இது பற்றி உலக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் முகமாக ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் 1992 ஆம் ஆண்டு உயிர்ப்பல்வகைமை பற்றிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

### உயிர்ப்பல்வகைமை என்பது...

உயிர்ப்பல்வகைமை என்பது, பூமியில் வசிக்கும் பலதரப்பட்ட உயிரினங்களைக் குறிக்கும் சொல்லாகும். இது மூன்று வகைப்படும்.

**01 மரபியற் பல்வகைமை**
குறிப்பிட்டதோர் இனத்தைச் சார்ந்ததாக, பலதரப்பட்ட உயிரினங்கள் இருக்கும் நிலையினையே இது குறிக்கின்றது.

**02 இனப் பல்வகைமை**
ஒரு பிரதேசத்தில் வாழும் பலதரப்பட்ட இனங்கள் இதில் அடங்கும்.

**03 சூழல் தொகுதி பல்வகைமை**
குறிப்பிட்டதோர் இடத்திலுள்ள சூழல் தொகுதிகளில் காணப்படும் வேறுபாடுகளை இது குறிக்கின்றது.

United Nations Deca... ...odive...

### ...யிர்ப்பல்வகைமைப் ...திப்பு மனிதனில் ...படுத்தும் தாக்கம்

...ில் வாழும் குடும்பங்கள், சமூகங் ...அரசுகள் மற்றும் எதிர்கால சந்ததி ...ான அனைத்து தரப்பினரும் சார்ந் ...கின்ற பிரதான காரணியாக ...ர்ப்பல்வகைமையைக் குறிப்பிடலாம்.

## இருப்பிடங்களை இழப்பதனால் ஏற்படும் உயிர்ப்பல்வகைமைப் பாதிப்புகளைத் தடுத்துக்கொள்வதற்கான அய்ச்சி இலக்குகள் சில...

1. உயிர்ப்பல்வகைமையின் முக்கியத்துவம் பற்றி மக்களுக்கு அறிவுறுத்தல் மற்றும் அதனைப் பாதுகாத்தல்.
2. தேசிய மற்றும் பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் உயிர்ப் பல்வகைமை பற்றிய விடயங்களைச் சேர்ப்பதோடு, வறுமையை ஒழிப்பதற்காக அவற்றைப் பயன்படுத்தல்.
3. உயிர்ப்பல்வகைமைக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் விடயங்களை சுற்றாடலிலிருந்து அகற்றல் மற்றும் குறைத்தல்.
4. நிலையான உற்பத்திக்காக அரசு மற்றும் இதர பங்காளர்கள் முன்னணி வகித்தல்.
5. காடுகள் உள்ளிட்ட, அனைத்து இயற்கை இருப்பிடங்களையும் இழக்கும் விகிதத்தினைக் குறைத்தல்.

ஜப்பானின் அய்ச்சி பிராந்தியத்தில் நடைபெற்ற COP 10 மாநாட்டில், 2011 முதல் 2020 வரையான காலப்பகுதி 'உயிர்ப்பல்வகைமை தசாப்தம்' ஆக ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், அதற்குரிய உபாயத்திட்டங்களின்கீழ் 20 அய்ச்சி இலக்குகள் முன்வைக்கப்பட்டன.

### ...கள் அழிப்பு
...ction

...துகாப்பதற்கு கண்டல் ...பிளை ஆற்றுகி... ...ான உயிர்ப்பல்... ...லும், இந்த கண்டல் தாவர ...அழிவுகளுக்கு உட்பட்டு ... உற்பத்தி இதில் முக்கிய ... காரணமாக நன்னீர் நீர் ...ப்பு நிலங்களும் பாதிப்படை ...ாமாக, மிக வேகமாக ...ண்டல் காடுகளைப் ...ுள்ளமை குறிப்பிடத்தக்கது.

...000





## 04 திண்மக் கழிவுகளினால் ஏற்படும் சூழல் மாசடைவு
### Solid Waste Pollution

சனத்தொகை அதிகரிப்பினால் சூழலில் சேரும் திண்மக் கழிவுகளின் அளவும் அதிகரித்துச் செல்கின்றது. அறிக்கைகளின்படி, நாளாந்தம் இலங்கையில் சேரும் திண்மக் கழிவுகளின் அளவு 4500 தொன்களாகும் எனத் தெரியவந்துள்ளது. இந்த கழிவுகள் திறந்தவெளிகளிலும் ஆறு மற்றும் கரையோரப் பகுதிகளிலும் குவிக்கப்படுகின்றன. இதனால் சூழல் மாசடைகின்றது.





குப்பைகளை சரியான முறையில் முகாமைத்துவத்திற்கு உட்படுத்தி, இயற்கை உரம் தயாரிப்பதற்கு வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 05 விவசாய ரசாயனப் பயன்பாடு
### Agro Chemicals

பயிர்ச்செய்கைகளில் ரசாயனங்களின் பயன்பாடும் உயிர்ப்பல்வகைமையைப் பாதிக்கும் பிரதான காரணியாக இனங்காணப்பட்டுள்ளது.

விவசாயத்தில் ரசாயனப் பயன்பாடு காரணமாக, பூச்சிகள் மற்றும் களைகள் அழிக்கப்படுவதனால், அந்த சூழல் தொகுதிக்கான உயிர்ப்பல்வகைமைத்துவம் பாதிக்கப்படுகின்றது. இலங்கையில் அபாயகரமான விவசாய ரசாயனங்களின் பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெமர் பேரரசின் சிறப்புக்கூறும் அங்கோர் நகரம்





கி.மு. 1 ஆம் நூற்றாண்டில் இருந்து 15 ஆம் நூற்றாண்டு வரை தென்கிழக்கு ஆசியாவில் கெமர் பேரரசு யுகம் நிலவியதாக வரலாற்று ரீதியாக கருதப்படுகிறது. கெமர் பேரரசின் தலைநகர் அங்கோர் ஆகும். கம்போடியாவுக்கு சொந்தமான பிரதேசத்திலேயே இந்த அங்கோர் நகரம் அமைந்திருந்தது. நீண்ட காலமாக நிலவிய எல்லைப் போர் காரணமாக, இந்த நகரம் அழிவடைந்து போனதாக கருதப்படுகின்றது. எனினும், அண்மைக் காலத்தில் யுனெஸ்கோ அமைப்பு இந்த புராதன நகரத்தை உலக மரபுரிமைத் தளமாக பிரகடனப்படுத்தியதை அடுத்து, அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாண மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் காரணமாக, அங்கோர் நகரம் இன்று ஆசியாவிலேயே புகழ்பெற்ற சுற்றுலாத் தளமாக மாறியுள்ளது.




## அங்கோர்

அங்கோர் என்பது கெமர் மொழிச் சொல்லாகும். தமிழில் அதன் அர்த்தம் 'பூஜைக்குரிய நகரம்' என்பதாகும். அங்கோர் நகரானது, மத வழிபாட்டுத் தலங்கள், தூண்கள், தூபிகள், சிலைகள், குளக்கட்டுகள், அகழிகள் என்பனவற்றை உள்ளடக்கிய மாபெரும் நகரமாகும். கி.மு. 1ஆம் நூற்றாண்டில் இருந்து 15 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதிவரை அது படிப் படியாக வளர்ச்சி அடைந்து மாபெரும் நகரமாக விரிவடைந்தது. அந்நகரில் வாழ்ந்த மக்கள் யாவர்? என தொல்பொருள் ஆய்வாளர்களால் இதுவரை உறுதியாக கூற முடியவில்லை.

## வியப்பூட்டும் நிர்மாணம்

அங்கோர் நகருக்குச் சொந்தமான உன்னத நிர்மாணமாக 'அங்கோர் வாட்' வழிபாட்டுத் தலத்தைக் குறிப்பிடலாம். இது உலகின் மாபெரும் வழிபாட்டுக் கட்டடமாகக் கருதப்படுகின்றது. இக்கட்டடமானது, புராதன கம்போடிய வாஸ்து விஞ்ஞான சம்பிரதாயங்களுக்குட்பட்ட உன்னத படைப்பாக புகழ்பெற்றுள்ளது. இரண்டாம் விஜயவர்மன் மன்னனின் ஆட்சிக் கா[illegible]தில் இது நிர்மாணிக்கப் பட்டது. அவர் இதனை விஷ்ணு கடவுளுக்கான வழிபாட்டுத் தலமாகக் கட்டினார்.எனினும், ஏழாம் விஜயவர்மன் இக்கட்டடத்தை பௌத்த விகாரையாக மாற்றினான். இது இன்று பௌத்த வழிபாட்டுத் தலமாகவே உள்ளது.

-அ!

# கண்டுபிடிக்கப்பட்ட புராதன படகு



கம்போடியாவின் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் உலகப் புகழ்பெற்ற 'அங்கோர் வாட்' வழிபாட்டுத் தலத்திற்கு அருகிலான ஆற்றங்கரையில் புதைந்து காணப்பட்ட தொன்மையான - சிதைந்த நிலையிலான படகொன்றினை அந்நாட்டின் தொல்பொருள் ஆய்வாளர்கள் அண்மையில் கண்டுபிடித்துள்ளனர். மரத்தினாலான இந்தப் படகினை விவசாயிஒருவரே முதலில் கண்டுள்ளார். பின்னர் இது பற்றி கம்போடிய தொல்பொருள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இந்தப் படகானது, 8ஆம் நூற்றாண்டிற்குரித்தானது என்றும், இது கெமர் பேரரசின் கடற்படைக்குச் சொந்தமான படகென்றும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. ஆற்றங்கரையில் மண்ணுக்கடியில் புதையுண்டிருந்ததனால், இது மிகவும் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் படகு தொடர்பான தொல்பொருள் முக்கியத்துவங்களைக் கண்டுபிடிக்க கம்போடிய தொல்பொருள் ஆய்வாளர்களுக்கு, நியூஸிலாந்து தொல்பொருள் ஆய்வாளர்கள் குழுவொன்று உதவி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் படகானது, 12.8 மீற்றர் நீளம் கொண்டதெனக் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதலாவது கண்டல் தாவர அருங்காட்சியகம்







சிலாபம் - பம்பல எனுமிடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உலகின் முதலாவது கண்டல் தாவர அருங்காட்சியகத்தினை ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்கள் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

உலகில் பல துறைகளை அடிப்படையாகக் கொண்டு அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளபோதிலும், கண்டல் தாவரங்களை மையப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள முதலாவது அருங்காட்சியகம் இதுவாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தீவுகள், கடலரிப்பிற்கு உட்படுவதிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு கண்டல் தாவரங்கள் பெரிதும் உதவுகின்றன. அத்தகைய தாவரங்களை மையப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகம் உலகத்தின் கவனத்தினை ஈர்க்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.


எதிர்வரும் ஐந்தாண்டுகளில் ஐந்து லட்சம் கண்டல் தாவரங்களை நடவும் இந்த நிகழ்வின்போது திட்டமிடப்பட்டுள்ளது.

# சிறுநீரகக் கோளாறுகளுக்கு பிரதான காரணம் 'ஃப்ளோரைட்'?




இலங்கையில் சிறுநீரகக் கோளாறுகள் அதிகரிப்புக்கு பிரதான காரணம் 'ஃப்ளோரைட்' ஆகும் என்று பேராதனை பல்கலைக்கழக புவிச்சரிதவியல் விருது பெற்ற பேராசிரியர் சி.பி. திசாநாயக்க தலைமையிலான ஆய்வுக் குழுவினர் கண்டறிந்துள்ளனர். களைக்கொல்லி ரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினிகள் என்பன சிறுநீரகக் கோளாறுகளை ஏற்படுத்துவதாகக் கூறப்பட்டாலும், களைக்கொல்லிகள் மற்றும் கிருமிநாசினிகள் அதிகம் பயன்படுத்தப்படும் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு சிறுநீரகக் கோளாறுகள் பரவலாக ஏற்பட்டிருக்கவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளதாக பேராசிரியர் திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், 1990 இலிருந்து இலங்கையின் நிலத்தடி நீர் குறித்து பேராசிரியர் திசாநாயக்கவுடன் இணைந்து விசேட வைத்திய நிபுணர் குழுவொன்று நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட ஆய்வுகளின் படி, நிலத்தடி நீரில் ஃப்ளோரைட் அதிகம் உள்ள பகுதிகளில் வாழும் மக்களிடையே சிறுநீரகக் கோளாறு அதிகமாக இருக்கின்றது என்றும், நிலத்தடி நீரில் ஃப்ளோரைட் குறைவாக உள்ள பகுதிகளில் வாழும் மக்களிடையே



சிறுநீரகக் கோளாறு குறைவாக உள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சிறுநீரகக் கோளாறுகள் காரணமாக, இலங்கையில் இதுவரை சுமார் 40 ஆயிரம் பேர் இறந்துள்ளதுடன், சுமார் 60 ஆயிரம் நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

# தாமரை

தாவரவியல் பெயர் : *Nelumbo nucifera*
குடும்பம் : Nelumbonaceae
ஆங்கிலப் பெயர்கள் : Lotus, Indian lotus, sacred lotus, bean of India.
சிங்களப் பெயர் : நெலும்.




இதுவொரு நீர்வாழ் பல்லாண்டுத் தாவரமாகும். இந்து மற்றும் பௌத்த மதங்கள் சார்ந்த அனுஷ்டானங்களில் தாமரைப் பூக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தாமரையில் பல வகைகள் உள்ளன. அவற்றில் வெண்தாமரையும் செந்தாமரையும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் நீர்நிலைகளில் வளரும் இயல்புடைய நீர்த் தாவரமாக தாமரையைக் குறிப்பிடலாம். தாழ்நாட்டு உலர் வலய மற்றும் ஈர வலயப் பகுதிகளில் வெண் தாமரையை அதிகம் காணலாம். தவிர, ஆசிய நாடுகளான இந்தியா, சீனா, திபெத், ஜப்பான் என்பனவும் கிழக்கு அவுஸ்திரேலியாவும் தாமரைக்குப் பிரசித்தி பெற்ற இடங்களாகும். தாமரையின் பாகங்கள் மருத்துவக் குணம் மிக்கவை. இதன் கிழங்கு, விதைகள் என்பன உணவாகப் பயன்படுகின்றன. பண்டைய கால சிற்பக்கலைகள் மற்றும் ஓவியக்கலைகளிலும் தாமரைப்பூ மற்றும் இதழ் அலங்காரங்களைக் காணலாம்.



தாமரைக் காய் மற்றும் விதைகள்



தாமரைக் கிழங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் கமல், ராஜா, சமன் ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

කමල්: ලබන සතියේ සරුංගල් තරඟයක් තියෙනව නේද?
லபன சதியே சருங்கல் தரங்கயக் தியெனவ நேத?
கமல்: அடுத்த வாரம் பட்டம் விடும் போட்டியொன்று இருக்கிறது அல்லவா?

රාජා: අපිත් සරුංගලයක් හදල යවමු ද?
அப்பித் சருங்கலயக் ஹதல யவமு த?
ராஜா: நாங்களும் பட்டமொன்று செய்து விடுவோமா?

සමන්: අන්න හොඳ වැඩක්. අපි හදමු.
அன்ன ஹொந்த வெடக். அப்பி ஹதமு.
சமன்: அது நல்லதொரு வேலை. நாம் செய்வோம்.

කමල්: අපි කොහේ ඉඳල ද සරුංගලය හදන්නේ?
அப்பி கொஹே இந்தல த சருங்கலய ஹதன்னே?
கமல்: நாம் எங்கே இருந்து பட்டம் செய்வோம்?

රාජා: අපේ ගේ පිටිපස්සේ තියෙන මඩුවේ හදමු.
அப்பே கே பிட்டிபஸ்ஸே தியென மடுவே ஹதமு.
ராஜா: எங்கள் வீட்டுக்குப் பின்னால் இருக்கின்ற மடுவத்தில் செய்வோம்.

කමල්: අපි තුන්දෙනා එකතු වෙලා හොඳ ලස්සන සරුංගලයක් හදමු.
அப்பி துந்தெனா எகதுவெலா ஹொந்த லஸ்ஸன சருங்கலயக் ஹதமு.
கமல்: நாம் மூவரும் ஒன்றிணைந்து நல்ல அழகானதொரு பட்டம் செய்வோம்.

සමන්: අවශ්‍ය තරම් පාට කොළ මම ගේන්නම්.
அவஷ்ய தரம் பாட்ட கொள மம கேன்னம்.
சமன்: வேண்டியளவு நிறக் கடதாசிகள் நான் கொண்டு வருகிறேன்.

රාජා: අපේ ගෙදර උණබට තියෙනවා.
அப்பே கெதர உணபட்ட தியெனவா.
ராஜா: எங்கள் வீட்டில் மூங்கில்கள் இருக்கின்றன.

කමල්: අනිත් බඩු මම ගේන්නම්.
அனித் படு மம கேன்னம்.
கமல்: மற்றைய பொருட்களை நான் கொண்டு வருகிறேன்.

රාජා: අපි හෙටම වැඩේ පටන් ගමු.
அப்பி ஹெட்டம வெடே பட்டன் கமு.
ராஜா: நாம் நாளைக்கே வேலையைத் தொடங்குவோம்.



**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ................ තරඟයක් තියෙනවා.
2. .......... ලස්සන සරුංගලයක් හදමු.
3. අපේ ගෙදර ............ තියෙනවා.
4. අපි ............ වැඩේ පටන් ගමු.




பகுதி - 02
பாடம் - 14

## தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்
## Direct speech & Indirect speech

உடன்பாடு வாக்கியங்களை, 'தன் கூற்று' நிலையில் இருந்து, 'பிறர் கூற்று' நிலை வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறை பற்றி மேலும் இங்கே கற்போம்.

அ) The teacher said, "I am teaching English".
ஆசிரியர் கூறினார், "நான் ஆங்கிலம் கற்பித்துக்கொண்டு இருக்கிறேன்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஆ) The teacher said that he was teaching English.
தான் ஆங்கிலம் கற்பித்துக்கொண்டு இருப்பதாக ஆசிரியர் கூறினார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு:** மேற்படி (அ) தன் கூற்று வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, 'I' எனும் பிரதிப் பெயர்ச்சொல், 'he' என மாற்றப்பட்டுள்ளதையும், அவ்வாறே 'am' எனும் நிகழ்கால வினைச்சொல், 'was' என இறந்தகால வடிவத்திற்கு மாற்றப்பட்டுள்ளதையும் பிறர் கூற்று வாக்கியத்தில் அவதானிக்கலாம்.

இ) Ragu said, "It is my fault".
ரகு கூறினான், "அது எனது தவறு" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஈ) Ragu said that it was his fault.
அது தனது தவறு என ரகு கூறினான்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு:** மேற்படி (இ) தன் கூற்று வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, 'is' எனும் நிகழ்கால துணை வினைச்சொல், பிறர் கூற்று (ஈ) வாக்கியத்தில் 'was' என இறந்தகால வடிவத்திற்கு மாற்றப்பட்டுள்ளதை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

உ) David said, "I can cross the bridge".
டேவிட் கூறினான், "என்னால் பாலத்தைக் கடக்க முடியும்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஊ) David said that he could cross the bridge.
தன்னால் பாலத்தைக் கடக்க முடியுமென டேவிட் கூறினான்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு:** மேற்படி (உ) தன் கூற்று வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, 'I' எனும் பிரதிப் பெயர்ச்சொல், 'he' என மாற்றப்பட்டுள்ளதையும், அவ்வாறே 'can' எனும் நிகழ்கால துணை வினைச்சொல், 'could' என இறந்தகால வடிவத்திற்கு மாற்றப்பட்டுள்ளதையும் பிறர் கூற்று வாக்கியத்தில் அவதானிக்கலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுத் தெம்புடன் இலங்கை அணி



அவுஸ்திரேலிய அணியுடனான மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றியீட்டியுள்ள இலங்கை அணி தற்போது புதுத் தெம்பைப் பெற்றுள்ளதாக விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். ஏற்கனவே இரண்டு போட்டிகளை வெற்றி கொண்டிருந்த இலங்கை அணி மூன்றாவதும் இறுதியுமான போட்டியிலும் வெற்றியீட்டியதையடுத்து ஆஸி அணியை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

குறிப்பாக, இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்கள் தனஞ்சய சில்வா, குஷல் சில்வா மற்றும் சுழல் பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் ஆகியோரின் தனித்திறமையாலேயே இலங்கை அணி இந்த வெற்றிகளை குவித்தது எனலாம். இறுதிப் போட்டியிலும் கூட தனஞ்சய சில்வா, குஷல் சில்வா இரண்டு பேரும் சென்ட்ச்சரிகளை பெற்றதுடன், பந்துவீச்சில் ரங்கன ஹேரத் இரண்டு இன்னிங்ஸிலும் மொத்தமாக 13 விக்கெட்களை பெற்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இப்போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 355 ஓட்டங்களைப் பெற்றதுடன் ஆஸி அணி 379 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது இனிங்ஸில் இலங்கை அணி 347 ஓட்டங்களைப் பெற்றதுடன், ஆஸி அணி 160 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து 163 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. ஆட்டத் தொடரின் சிறப்பாட்டக்காரராக ரங்கன ஹேரத் தெரிவாகினார்.




# தரப்பட்டியலில் ஆஸி. அணி பின்னடைவு

டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியலில் முதலிடத்திலிருந்த அவுஸ்திரேலிய அணியை மூன்றாம் இடத்திற்கு தள்ளிய இலங்கை அணி அதே பட்டியலில் 6 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இலங்கை-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே நடைபெற்ற 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 3 போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றியீட்டியதையடுத்தே, இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது. இதன்படி, இந்திய அணி முதலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளதுடன், பாகிஸ்தான் அணி இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

Ranking International Cricket Council

பட்டியல் விபரம் வருமாறு:

| இடம் | நாடு | புள்ளி |
|---|---|---|
| 01 | இந்தியா | 112 |
| 02 | பாகிஸ்தான் | 111 |
| 03 | அவுஸ்திரேலியா | 108 |
| 04 | இங்கிலாந்து | 108 |
| 05 | நியூஸிலாந்து | 99 |
| 06 | இலங்கை | 95 |
| 07 | தெ.ஆபிரிக்கா | 92 |
| 08 | மே.இ.தீவுகள் | 65 |
| 09 | பங்களாதேஷ் | 57 |
| 10 | சிம்பப்வே | 08 |

# கீழே விழுந்தபோதும் முதலிடம் வென்றான்



பிரிட்டனில் குடியுரிமை பெற்ற சோமாலிய நாட்டைச் சேர்ந்த 33 வயதுடைய மோ ஃபாரா என்ற ஓட்டவீரர் ரியோ ஒலிம்பிக் 10,000 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாவது இடத்தில் ஓடிக் கொண்டிருக்கையில் கால் இடறி கீழே விழுந்த போதிலும் தன்னை சுதாகரித்துக் கொண்டு மீண்டும் எழுந்து ஓடி முதல் இடத்தை அடைந்து தங்கப் பதக்கத்தை வென்ற காட்சி ரசிகர்களை பெரிதும் கவர்ந்த ஓர் அம்சமாக அமைந்தது.



இப்போட்டியில் இவர் ஓடிக்கொண்டிருக்கையில் அமெரிக்க வீரர் சினென் என்பவரின் காலுடன் கால் மோதுண்டதிலேயே இவர் இடறி விழுந்தார். முயற்சியை கைவிடாது ஓடிய ஃபாரா இறுதி 200 மீற்றர் தூரத்தின் போது இரண்டாவது இடத்திலேயே இருந்தபோதிலும் இறுதிக் கட்டத்தில் வேகத்தை அதிகரித்து முதலாவது இடத்தைப் பெற்றார்.

# ஒலிம்பிக் டென்னிஸில் மரே தங்கம் வென்றார்



ஒலிம்பிக் டென்னிஸ் போட்டிகளில் பிரிட்டன் சார்பாக இரண்டு முறை தங்கப் பதக்கம் வென்ற முதலாமவர் என்ற பெருமையை பிரிட்டனின் என்டி மரே பெற்றுள்ளார். இதற்கு முன்னர் 2012 லண்டன் ஒலிம்பிக்கிலும், இவர் தங்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இறுதிப் போட்டியில் ஆர்ஜன்டீனாவின் டேல் புரோட்டோவை 7-5, 4-6, 6-2, 7-5 எனும் கணக்கிலேயே மரே வெற்றி கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு கெம்போரி!



'மனித வாழ்க்கைக்கு நீர் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது' என்பதனை சாரணர்களுக்கு உணர்த்துவதே இம்முறை கொழும்பு மாவட்ட கெம்போரியின் குறிக்கோளாகவும், தொனிப்பொருளாகவும் அமைந்திருந்தது.

விஜய் சாரணர் உலகம்

## கூட்டு நடமாடும் கொடியை மரக் கம்பத்தில் கொடியேற்றுவோம்!

குழுக்களைக் கொண்ட சாரணர் கூட்டணி ஒரே தினத்தில் ஒன்றிணைந்து முகாம் அமைக்கும் போது கூட்டு நடமாடும் கொடி மரக் கம்பத்தை இவ்வாறு ஸ்தாபித்துக் கொள்ளமுடியும்.


## கட்டுமரம் ஒன்றை சரிவர நிர்மாணிப்போம்!

சாரணர் திறந்தவெளி செயற்பாடுகளில் கட்டுமரம் படைப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதன்படி இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உங்களுக்கு பயன்மிக்கதாக அமையும்.

**தேவையானவை:**

- ★ நீரில் மிதக்கும் பீப்பாய்கள்
- ★ தேவையான அளவு சாரணர் தடிகள்
- ★ தேவையான அளவில் கயிறு

### முதலாவது வடிவத்தினை உருவாக்குதல்




படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு இரண்டு பீப்பாய்களின் மீது சாரணர் தடிகளை வைத்துக்கொள்ளுங்கள். தடிகள் நகராதவாறு இறுக்கமாக கயிற்றினால் கட்டிவிடுங்கள். அதற்கு சதுர முனைகளைப் பயன்படுத்த வேண்டும்.

**கவனிக்க:** இரண்டு பீப்பாய்களையும் தடிகளையும் தொடர்புபடுத்தும் போது பலம் பொருந்திய கயிற்றினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

### இரண்டாவது வடிவத்தினை உருவாக்குதல்

எத்தனை சாரணர்கள் பயணிக்கப் போகின்றார்கள் என்பதனை தீர்மானித்துவிட்டு அதற்கேற்ற வகையில் இரண்டாவது




வடிவத்தினை உருவாக்கமுடியும். இரண்டு நீள் தடிகளில் சிறிய தடிகளை குறுக்காகக் கட்டி இதனை உருவாக்க முடியும். ஏணி போன்ற அமைப்பில் இது இருக்கும்.


### இரண்டு வடிவங்களை பொருத்துவோம்

இந்த இரண்டு வடிவங்களையும் படத்திலுள்ளவாறு பொருத்துதல் வேண்டும்.

### இரண்டு வடிவங்களை பொருத்துதல்

தரையில் வைத்து வெவ்வேறாக வடிவமைக்கப்பட்ட இந்த இரண்டு பகுதிகளையும் நீரில் வைத்து ஒன்றையொன்று தொடர்புபடுத்தியே பொருத்திக் கொள்ளவேண்டும்.





## பீனக்கோல் இளநீர் சூப் செய்வோம்!

பிலிப்பைன்ஸ் நாட்டின் சாரணர்கள் சாரணர் முகாம்களில் நிர்மாணிக்கும் 'பீனக்கோல் இளநீர்' சூப்பினை நீங்களும் செய்யலாம்.



**தேவையான பொருட்கள்:**

- ★ இளநீர் காய்
- ★ பச்சைமிளகாய்
- ★ சிறிதளவு கோழி இறைச்சித்துண்டுகள்




படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு இளநீர் காயின் மேல் முனைப் பகுதியினை முடியொன்றை ஒத்த வடிவில் வெட்டி அகற்றிக் கொள்ளவேண்டும். அதன்பின்னர் அதன் உட்பகுதி தசைப்பகுதியினை சுரண்டி எடுத்து இளநீருடன் கலந்து கொள்ள வேண்டும். கோழி இறைச்சித் துண்டுகளையும் பச்சை மிளகாய்களையும் இளநீர் காயினுள் இட்டு கலந்து கொள்ளவும். இறைச்சித் துண்டுகள் நன்கு வேகும் வரை இளநீர் காயை மெல்லிய தீயில் வைத்து 20 நிமிடங்கள் வரை வாட்டிய பின்னர் எடுத்து அருந்தமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறம் தீட்டுக


நிறக் குறியீடு
- 0 - கபில நிறம்
- 2 - சிவப்பு நிறம்
- 4 - நீல நிறம்
- 6 - மஞ்சள் நிறம்
- 8 - பச்சை நிறம்




**எண் தொடரை அவதானித்து, இடைவெளிகளை நிரப்புக**





**படத்தூரவுகளுக்கான ஆங்கிலச் சொற்களை உரிய கட்டங்களில் எழுதுங்கள்**



### அறிவுக்கு விருந்து (10.08.2016) விடைகள்









1. மிகச் சிறிய உருவில் × அடையாளமிடுக.




2. மிகப் பெரிய உருவில் × அடையாளமிடுக.



3. மிகப் பெரிய உருவில் × அடையாளமிடுக.



### குறுக்கெழுத்துப் போட்டி: 202



#### மேலிருந்து கீழ்

01. பாதரட்சை.
02. கைவேலை. (குழம்பியுள்ளது)
03. ஒப்பனை.
07. பெண் யானை.
09. ஒளி ஊடுருவக்கூடியதும் எளிதில் உடையக்கூடியதுமான பொருள். (குழம்பியுள்ளது)
10. கொக்கரிக்கும். (தலைகீழ்)

#### இடமிருந்து வலம்

01. கோணத்தை அளக்கும் அரைவட்டக் கருவி.
04. பட்டு, பருத்தி நூல்களால் நெய்யப்படுவது.
05. எண்ணிக்கையில் அதிகம் என்பதைக் குறிக்கும் சொல்.
06. கரம்பற்று.
08. காட்டு. (குழம்பியுள்ளது)
09. உணவு உண்ணவும் பரிமாறவும் பயன்படுவது. (குழம்பியுள்ளது)
10. பருவகாலங்களில் ஒன்று.

**குறுக்கெழுத்துப் போட்டி: 201 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பி | ர | 2 ச | ங் | 3 கூ | ம் |
| ர | | ர் | | சை | |
| 4 ப | ரா | க் | 5 கு | | 6 ச |
| ல | | 7 க | லா | ப | ம் |
| ம் | | ரை | ல் | 8 லா | 9 வ |
| | 10 ஃ | | | ம் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை, கிண்ணியா, ஈச்சந்தீவைச் சேர்ந்த சிவசங்கர் - பிரியதர்ஷினி தம்பதியரின் செல்வப் புதல்வன் தேமதுரன், தனது பிறந்தநாளை 24.08.2016 ஆகிய இன்று கொண்டாடுகின்றார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

விஜய் விழா உலா
த.பெ. எண் 2037
கொழும்பு




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



கே.உதயராஜ்,
டொன் பொஸ்கோ கல்., மன்னார்.



மே.டஸாஜினி,
கன்னன்குடா மகா வித்தியாலயம்,
மட்டக்களப்பு.




ஆர்.மதுர்ஷயன்,
மன்னம்பிட்டி த.ம.வித்தியாலயம்,
மன்னம்பிட்டி.




ஆர்.இஸ்ஹாக் அஹ்மத்,
மாறை/வெலிகம மு.ஆ.பாட.,
வெலிகம.



எஸ்.நிரோஜன்,
ஸ்ரீ சண்முகானந்தா த.வித்., ஹாலி-எல.



எஃப்.அஸ்மா,
சாஹிரா மு.வித்., ஹபுகஸ்தலாவை.




எம். முஹம்மத்,
க/றனபிம றோயல் கல்லூரி,
பேராதனை.

# செவ்வாயில் வாழ்ந்த உயிரினங்கள்


எமது ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள செவ்வாய் கிரகம் பற்றிய மர்மங்கள் புதிய ஆய்வுகளின்மூலம் சிறிது சிறிதாக புலப்பட்டு வருகின்றன. அந்தவகையில், கோடிக்கணக்கான வருடங்களுக்கு முன் அதாவது, பூமியில் முதலாவது



உயிரினமான பெக்டீரியாக்கள் தோற்றம் பெற்ற காலகட்டத்திற்கு முன்னரே, செவ்வாய் கிரகத்தில் அதன் காலநிலைக்கு ஏற்ப மாறுபட்ட தோற்றங்களைக் கொண்ட உயிரினங்கள் வாழ்ந்திருக்கலாம் என கருதப்படுகின்றது. இதற்கான மட்டுப்படுத்தப்பட்ட ஆதாரங்களை ஏற்கனவே அனுப்பப்பட்ட கியூரியோசிட்டி ஆய்வுக்கலம் ஓரளவு வெளிப்படுத்தியுள்ளது.



ஜீ.ஹம்சனன்,
முன்பள்ளி, புதுக்குடியிருப்பு.



இ.டிரோன் எலன்ஸன்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
தலவாக்கலை.

# கள்ளமில்லா வெள்ளை உள்ளம்



உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் கள்ளம், கபடம் இல்லாத தூய்மையான உள்ளத்துடனேயே பிறக்கின்றது. அவை வளர்ச்சி அடையும்போதே நல்ல குணங்களையும் தீய குணங்களையும் தாம் வாழும் சூழலில் இருந்து கற்றுக்கொள்கின்றன. அந்தவகையில், ஒழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நல்லதொரு சூழ்நிலையில் வளர்க்கப்படும் குழந்தை நல்ல மனிதனாகவும், தீய போதனைகளின்கீழ் தீயதைப் பார்த்து தவறான சூழலில் வளரும் குழந்தை தீய மனிதனாகவும் மாற்றம் பெறுகின்றது. இதற்கமைவாக, ஒரு பிள்ளையின் பழக்க வழக்கங்கள், நடை, உடை, பாவனை என்பன அது வளர்க்கப்படும் முறை மற்றும் சூழலிலேயே பெருமளவில் தங்கியுள்ளது.

ஏனெனில், பிள்ளைகள் தம்மைச் சுற்றி உள்ள மனிதர்களின் நடை, உடை குணாதிசயங்களை மிக உன்னிப்பாக அவதானித்து, அவற்றையே தாமும் பின்பற்ற முனைகின்றன. ஆகவே, ஆரோக்கியமான சூழலில் பிள்ளைகள் வளர்வதுடன், பிள்ளைகளின் முன் பெரியவர்களின் நடத்தைகளும் பண்புடன் இருத்தல் அவசியமாகின்றது. ஏனெனில், பெற்றோர்களின் நடத்தைகள் பண்பு நிறைந்ததாகவும் ஆரோக்கியமாகவும் அமையும் போதுதான் பிள்ளைகளின் பிஞ்சு உள்ளங்களில் உயர்ந்த பண்புகளையும் எண்ணங்களையும் வளர்க்க முடியும். இவ்வாறே, நல்ல சிந்தனைகளை வளர்க்கும் தரமான நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் மிகவும் உயர்ந்த நிலையில் பிள்ளைகளை சிந்திக்க வைக்கின்றன. இவை பண்பு நிறைந்த பழக்கவழக்கங்களையும் அறிவையும் மிக இலகுவாக பிஞ்சு உள்ளங்களில் விதைத்தும் விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்களில் தேன் அருந்தும் மடகாஸ்கரின் ஐஐ குரங்கு



ஐஐ லெமூர்களை, டொபென்டோனியோ மடகஸ்கெரயன்சிஸ் (Daubentonia madagascariensis) என்று அழைக்கின்றனர். இதன்



ஆபிரிக்கா கண்டத்திற்கு அப்பால் இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள மடகாஸ்கர் சிறிய தீவிற்கே உரிய தனித்துவமான லெமூர் குரங்கு இனங்கள் அங்கு வசித்து வருகின்றன.

இவை விசாலமான கண்கள், நீண்ட காதுகள், தலையில் கலைந்து போன உரோமங்களைக் கொண்ட முன்னங்கால்களில் வித்தியாசமான முறையில் நீண்டு போயுள்ள நடுவிரலினைக் கொண்ட ஐஐ (Aye Aye) என்ற உயிரினமாகும். அத்தோடு, இந்த விலங்கினம் லெமூர் மற்றும் தேவாங்கு இனங்களைச் சேர்ந்ததாகும். இவை அதிக போதையினை தரும் தேனை அருந்துவதாகவும், எனினும், அவற்றுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படுவது இல்லை என்று ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

நியூஹெம்ஸ்ட்யர். டாட்ஒன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழுவினரால் மடகாஸ்கர் வனாந்தரங்களில் பயணித்து இந்த குரங்குகள் பற்றி ஆராய்ந்தே தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இயற்கையாகவே பூக்களிலுள்ள தேனிலும் மரங்களில் உள்ள இலைகளின் சாறுகளிலும் போதைத் தன்மை உள்ளது. எனவேதான், வானரங்கள் இந்த சாறுகளை அருந்துவது தொடர்பில் அதிக ஆர்வம் காட்டுகின்றன. குறிப்பாக, ஐஐ வானரம் அருந்தும் தேனில் மதுசாரம் அதிகளவில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னங்கால் பகுதியில் உள்ள நடுவிரல் மிகவும் சிறப்புத் தன்மை கொண்டதாகும். இந்த விரலி னால் மண்ணைத் தோண்டி அதனுள் வாழும் பூச்சிகளை, எறும்புகளை பிடித்து இரையாக்கிக் கொள்கின்றன என விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (-இ)

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 6181

நி.டனஸ்
புனித ஹென்றியரசர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 6182

அ.டிதுஷன்,
வவுனியா ம.வித்தியாலயம்,
வவுனியா.



அங்.இல: 6183

எம்.நதீர்,
குளி/மடிகே மிதியால ம.கல.,
குளியாப்பிட்டிய.


## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD



★ 4000 English Letter Writing Software



★ 8 GB Pen Drive



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

*10.08.2016* 'தூவானம்' கேள்விக்கான விடை:
கனடா
**Pendrive** வெற்றியாளர்:
க. விண்மதி
34/4, செல்வநாயகம் வீதி,
2 ஆம் குறுக்கு, மட்டக்களப்பு.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
**F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்**

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(24.08.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

இவ்வார கூப்பன்:
24.08.2016
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தெ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயக் குற்றிகளை பளபளப்பாக்கும் வித்தை



இன்று நாம் பழைய நாணயக் குற்றிகளை எப்படி பளபளப்பாக்கிக் கொள்வது என்று பார்ப்போம்!

**தேவைப்படும் பொருட்கள்:**

- ★ நிறம் மங்கிய பழைய காசுகள்
- ★ வினாகிரி 1/4 கோப்பை
- ★ உப்புத்தூள்
- ★ ஒரு பாத்திரம்
- ★ டிஷு தாள்கள் சில

## இவ்வாறு செய்வோம்

1/4 கோப்பை வினாகிரியில் உப்பு ஒரு தேக்கரண்டியினை சேர்த்து நன்கு கலக்கிக் கொள்ளுங்கள். இந்த கலவையில் நிறம் மங்கிய குற்றிகளை இட்டு 20 செக்கன்கள் வைக்க வேண்டும். அதன் பின்னர் குற்றிகளை நீரில் கழுவி 'டிஷு' தாளினால் துடைத்து உலர்த்திக் கொள்ளுங்கள். இப்பொழுது பாருங்கள் புதிய நாணயக்குற்றிகள் போன்று பளபளப்பாக இருப்பதை காணலாம்.



## எப்படி இந்த மாற்றம்...?

இன்று நாம் பாவித்த அனைத்து பொருட்களும் அணுக்களினால் உருவானவை. இதனால், நாணயக்குற்றிகளில் உள்ள 'செம்பு' (கொப்பர்) அணு வளிமண்டலத்தில் உள்ள ஒட்சிசன் அணுவுடன் எதிர்விளைவு காட்டுவதனால் கொப்பர் ஒக்சைட் உருவாகி நாணயக்குற்றிகள் நிறம் மங்குகின்றன.

இதன்போது வினாகிரி எனும் அமிலத்துடன் உப்புச் சேரும் போது இரசாயன நிகழ்வொன்று நடைபெறுகின்றது. இந்த நிகழ்வினால் கொப்பர் ஒக்சைட் அகற்றப்படுகின்றது. இதனால் தான் நாணயக்குற்றிகள் புதிதாக மிளிர்கின்றன.

## முயற்சித்துப் பாருங்கள்

வினாகிரி உப்பு கலந்த நாணயக் குற்றியினை வெளியில் எடுத்து நீரில் கழுவாமல் வைத்தால் என்னநடைபெறும்? குற்றியின் மேற் பகுதியில் நீலமும் பச்சையும் கொண்ட படிவம் உருவாகின்றது. உப்புமற்றும் வினாகிரிக் கலவை காரணமாக, நாணயக் குற்றியில் உள்ள செப்பு மற்றும் வளிமண்டலத்தில் உள்ள ஒட்சிசனுக்கு இடையிலான விளைவு வேகமடைவதால், இவ்வாறு நாணயக் குற்றியின் மீது நீலம், பச்சை நிறம் கொண்ட படிவம் படிகின்றது.






# லெசோத்தோ

தென் ஆபிரிக்காவுக்குச் சொந்தமான பிரதேசமான லொசொத்தோ 1966 இல் பிரித்தானிய ஆட்சியில் இருந்து சுதந்திரமடைந்தது. இந்நாடு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பொதுநலவாய அமைப்புகளில் அங்கத்துவம் வகிக்கின்றது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்டி லேவெல்ல கங்காராம விகாரை





இவ் விகாரையினை கி.பி 1747 ஆம் ஆண்டு கண்டி மன்னனாகிய கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் கட்டியெழுப்பி, அதற்கு கங்காராமை என பெயரும் சூட்டினான்.

இங்கு தீட்டப்பட்டுள்ள சுவரோவியங்கள் தான் இவ் விகாரையின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. இந்த விகாரைக்கு மிக அண்மையில் அமைந்துள்ள தெகல் தொருவ விகாரையும் கங்காராமை விகாரையும் ஒரே யுகத்தில் உருவானவை ஆகும்.

இச் சுவரோவியங்கள் அனைத்தும் மிக அழகாகவும், நேர்த்தியாகவும், தத்ரூபமாகவும் தீட்டப்பட்டிருப்பதோடு, பொருத்தமான பல்வேறு வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் விசேடத்துவம் என்னவென்றால், புத்தரின் வாழ்க்கை வரலாற்றின் ஆரம்பம் முதல் இறுதி வரையிலான பல்வேறு சந்தர்ப்பங்களை மிகத் தெளிவாகவும் தத்ரூபமாகவும் இதில் தீட்டப்பட்டுள்ளன. அத்தோடு கௌதம புத்தர் மூன்று சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு விஜயம் செய்து பதினாறு இடங்களுக்கு சென்றுள்ளார், அவ்விடயங்களும் இவ் ஓவியங்களில் தீட்டப்பட்டுள்ளமை விசேடமாகும். கல்லால் செதுக்கப்பட்ட புத்தர் சிலை தாபிக்கப்பட்ட இல்லத்தின் உள், வெளிப் புறங்களில் பல்வேறு சுவரோவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை 'திரைப்பட ஒளிநாடா' அமைப்பில் வரையப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச் சுவரோவியங்கள் புத்தரின் பிறப்பு முதல் அவர் ஞான ஒளி பெற்றது வரையிலான விபரங் கள் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளன.


- அ















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் தேவை...



- ★ ஒழுக்கம் இல்லாதவன் ஆடை இல்லாதவன் போன்றவனாவான்.
- ★ ஒழுக்கத்தை விற்றுச் செல்வம் தேட வேண்டாம்.
- ★ ஒழுக்கம்தான் உண்மையான சொத்து.
- ★ மதங்கள் பல; ஆனால், ஒழுக்கம் ஒன்றுதான்.
- ★ பிறருக்கு தொல்லை கொடுக்காத வாழ்வே ஒழுக்கமான வாழ்வாகும்.
- ★ ஒழுக்கம் இல்லாவிட்டால் வாழ்க்கையில் எதுவும் இல்லை.

# எல்லையைத் தாண்டாதே..!



விலங்குகளில் சில, தாம் வாழும் பகுதிக்குள் ஏனைய விலங்குகளை அனுமதிப்பதில்லை. அது தன் இனத்தைச் சேர்ந்த விலங்காக இருந்தாலும் சரியே. இந்த இயல்புகளை பெரும்பாலும் புலிகள், நாய்கள், பூனைகளிடத்தில் காணலாம். பூனைகளும் நாய்களும் சற்று இடம்கொடுத்தாலும், புலிகள் இதற்கு முற்றிலும் விதிவிலக்கு. அந்தவகையில், ஓர் ஆண் புலி, தான் வாழும் இடத்தில் சுமார் 50 சதுர மீற்றர் வரையான பகுதியை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும். தன் குடும்ப அங்கத்தவர்களைத் தவிர, வேறு எந்தவோர் ஆண் புலிகளும் அப்பகுதிக்குள் நுழைவதற்கு அது அனுமதிக்காது. அத்துடன், தனது எல்லையை அடையாளம் காட்டுவதற்காக, அடிக்கடி அப்பகுதிகளில் சிறுநீரும் கழிக்குமாம்!



# உருளைக்கிழங்கு





உணவுக்கு ஏற்ற பொருளாக சுமார் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கண்டறியப்பட்டதுதான் உருளைக்கிழங்கு. தென் அமெரிக்காவின் பெரு நாட்டிற்கும் பொலிவியா நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்த மக்களே, உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையை முதன்முதலில் மேற்கொண்டனர். எனினும், இன்றளவில் உருளைக்கிழங்கு உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு சீனாவாகும். உருளைக்கிழங்கில் 78 சதவீதம் நீரும் 18 சதவீதம் மாச்சத்தும் அடங்கியுள்ளன.

# ப்ளாஸ்டிக் போத்தல்களை அழிக்கும் பெக்டீரியாக்கள் கண்டுபிடிப்பு



சுற்றாடல் மாசடைவதற்கு ஏதுவாக உள்ள காரணிகளில், நாளுக்கு நாள் குவிந்து வரும் ப்ளாஸ்டிக் போத்தல்களும் அடங்குகின்றன. மக்கிவிடக் கூடிய தன்மையற்ற ப்ளாஸ்டிக் போத்தல்கள் சுற்றா டலில் குவியும்போது, அவற்றை அழித்துவிடும் நோக்கில் சிலர் எரிக்கின்றனர்.

இவ்வாறு எரிக்கும்போது மனிதர்களுக்கு உடல்நலப் பாதிப்புகள் ஏற்படும் அபாயமும் நிலவுகின்றது.

பொதுவாக, உயிரிழந்த அனைத்து இயற்கைப் பொருட்களையும் பெக்டீரியாக்கள் அழித்துவிடுகின்றன. இதனால், சுற்றாடல் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கப்படுகின்றது. ஆனால், ப்ளாஸ்டிக் போத்தல்கள் உட்பட, ஏனைய ப்ளாஸ்டிக் பொருட்கள் பெக்டீரியாத் தாக்கத்திற்கு உட்படுவதில்லை. எனவே, அவை பல்லாயிரம் ஆண்டுகளானாலும் அழியாமல் இருக்கும் அபாயம் நிலவுகின்றது. எனினும், ப்ளாஸ்டிக் போத்தல்களை அழித்துவிடக் கூடிய பெக்டீரியாக்களை ஜப்பானிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கியோட்டோ தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் மற்றும் கீயோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள், ப்ளாஸ்டிக் போத்தல்கள் மறுசுழற்சி ஆலையொன்றில் நடத்திய ஆய்வின் முடிவிலேயே இந்த பெக்டீரியாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, ஒகஸ்ட் 24 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday August 24, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org